RE/MAX Realtron Blue Force — Team Blue Force
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
Direct 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710


மலர்:- 29, 16 டிசம்பர் 2022 இதழ்:- 34

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

# 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல்! தமிழ் மக்களின் நீடிக்கும் பிரச்சனைக்குத் தீர்வு! இணக்கம் எட்டிய அரசமைப்பு தொடர்பில் பேசுதல்!

## தமிழ் பேசும் தரப்புக்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தல்!



தமிழ் மக்கள் மத்தியில் இன்றும் நீடிக்கும் காணி ஆக்கிரமிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, அரசியல் கைதிகள் விடுதலை ஆகிய பிரச்னைகளுக்கு தீர்வு காணல், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தல், புதிய அரசமைப்பு தொடர்பில் ஏற்கனவே (5ம் பக்கம் பார்க்க)

# காணாமல் போனவர்களை நீங்களே கொன்று விட்டீர்கள்! பொறுப்புக் கூறலை நிச்சயமாக நிறைவேற்றுங்கள் - சம்பந்தர்

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரையும் நீங்கள் கொன்று விட்டீர்கள் என்பது எமக்குத் தெரியும். ஆனால் என்ன நடந்ததென்ற உண்மை கண்டறியப்பட்டு பொறுப்புக்கூறல் நிச்சயமாக நிறைவேற்றப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்ததார். (7ம் பக்கம் பார்க்க)



# அமெரிக்கத் தூதுவரின் காதல் வலையில் விழுந்தாரா கோத்தா?

# மீண்டும் சென்னை - பலாலி விமானச் சேவை



நீண்டகால இழுபறிகளுக்குப் பின்னா யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்கும் இடையிலான விமான சேவை கடந்த திங்கட்கிழமை (12-12-2022) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக பலாலி விமான நிலையத்தைத் தயார்படுத்தும் வேலைகள் (9ம்பக்கம்)

# இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக மலையக, முஸ்லிம் கட்சிகளுடன் பேசுவது காலத்தை வீணடிக்கும்-தவராசா

# போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
Mortgage Alliance

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

WISHING YOU AND YOUR FAMILY A JOYFUL
## Holiday Season and a Prosperous year 2023

Thank you to all of my clients, family, and friends for trusting me with your Real Estate needs during the last 20 years.

*I hope to continue working with you in the future.*

**Mississauga /Sandalwood**


**Brampton** $677,000
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Kitchen

**Dixie & Clark**


**Brampton** $539,900
Bedrooms: 3 Washrooms: 2
Beautiful Corner Unit! Upgraded

**Sheppard & Warden**


**Scarborough** $595,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony

**Mccowan/Hwy 401**

**Scarborough** $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Suite, Laminate Fl

**Eglinton & Mccowan**



**Scarborough** $620,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Location Location Location!!!

**Birchmount & Enterprise**

**Markham** $699,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Modern Open Concept Kitchen

**Sandalwood Pkwy/Hurontario**


**Brampton** $839,000
Bedrooms: 3 Washrooms: 2
Location Location

**Simco St N/ Darcy**

**Oshawa** $998,000
Bedrooms: 3+1 Washrooms: 4
Fully Renovated Home

**Williams Pkwy/James Potter**

**Brampton** $1,699,900
Bedrooms: 4+2 Washrooms: 4
Upgraded Large Kitchen

**Markham & Major Mackenzie**

**Markham** $1,649,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx 3,450 Of Living Space

**Salem / Taunton**


**Ajax** $1,189,800
Bedrooms: 4+1 Washrooms: 4
Location Location Location!

**Don Mills/Eglinton**


**Scarborough** $549,900
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

3 AGP MART
4A WADE AVE
TORONTO

4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# 35 வருடங்களாகியும் 13வது திருத்தச்சட்டம் பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றோம்! இனப்பிரச்சனையைத் தீர்க்காவிட்டால் வடக்கில் இளைஞர்கள் போராடுவார்கள்

தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண்பது சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆரம்பித்துள்ள பேச்சுவார்த்தைகள் இதற்கு முன்னர் நடந்த பேச்சுவார்த்தைகள் போல் ஆகிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அனைத்து தரப்பினரின் கடமை என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் ஆரம்பமான சர்வகட்சி பேச்சுவார்த்தை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார். 35 ஆண்டுகளாகியும் 13வது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி பேசுகிறோம்

1987ஆம் ஆண்டு 13வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. தற்போது 2022 ஆம் ஆண்டு நாம் தற்போதும் 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி பேசிக் கொண்டிருக்கின்றோம்.

35 ஆண்டுகள் கடந்தும் அதனை எம்மால் நடைமுறைப்படுத்த முடியாமல்



போயுள்ளது. இதுதான் நாட்டின் உண்மையான நிலைமை. நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையிலும் 13 வது திருத்தச் சட்டத்தின் காணி பிரச்சினை வேறு பிரச்சினைகளை பேசி சிக்கலாக்கி கொள்வதை காணக்கூடியதாக இருந்தது.

13வது திருத்தச் சட்டம் முழுமையான நடைமுறைப்படுத்தப்படுமாயின் காணி பிரச்சினை தனியாக ஏற்படாது. 13வது திருத்தச் சட்டம் வடக்கு, கிழக்கு மக்களின் இரண்டு பிரதான பிரச்சினைகளுக்கு பதிலளித்தது.

ஒன்று அவர்களின் பாதுகாப்புக்காக பொலிஸ். இரண்டாவது அவர்கள் வாழும் காணி தொடர்பான உரிமை. இந்த இரண்டை உறுதிப்படுத்தினால், ஏனைய பிரச்சினைகள் தீர்ந்து விடும். அன்று 13வது திருத்தச் சட்டத்தை எதிர்த்தவர்கள் தற்போது அதற்கு இணங்கியுள்ளனர். எனினும் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சிக்கும் போது யாராவது எதிர்க்கலாம். அப்படித் தானே இந்த நாட்டில் வேலைகள் நடக்கின்றன.

நேற்றைய பேச்சுவார்த்தையில் கெவிந்து குமாரதுங்கவை தவிர ஏனைய அனைவரும் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற விடயத்தை ஏற்றுக் கொண்டனர். இது மிகப் பெரிய விடயம்.

13வது திருத்தச் சட்டம் சரியான தீர்வு என்று கூறியதன் காரணமாகவே அன்று விஜய குமாரதுங்கவை சுட்டுக்கொன்னர். அவரை (21ம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதிகளின் அபிமானி என அவமானப்படுத்தப்பட்ட ஜஸ்மின் சூக்காவிடம் வசமாக சிக்கிய கோட்டாவின் பிரதிநிதி

பிரிட்டனை தளமாக கொண்ட இலங்கை சட்டத்தரணி ஜயராஜ் பலிகவர்த்தனவிற்கு எதிரான வழக்கில் நீதி மன்றம் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஜஸ்மின் சூக்காவிற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஜயராஜ் பலிகவர்த்தன ஜஸ்மின் சூக்காவிற்கு எதிராக தவறான கருத்துக்களை தெரிவித்தமைக்காக நீதிமன்றத்தில் மன்னிப்பு கோரியுள்ளார். ஜஸ்மின் சூக்கா தடைசெய்யப்பட்ட இயக்கத்திற்கு பக்கச்சார்பானவர் என தெரிவிக்கும் அறிக்கையொன்றை வெளியிட்ட ஜயராஜ் பலிகவர்த்தன 47 தூதரகங்களிற்கு அதனை அனுப்பி வைத்திருந்தார்.

இதனை தொடர்ந்து பிரிட்டனின் 2018 தரவுபாதுகாப்பு சட்டத்தின் கீழ் தரவு பாதுகாப்பு மனுவொன்றை தாக்கல் செய்த ஜஸ்மின் சூக்கா தனது தனிப்பட்ட கௌரவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய தவறான தகவல் வெளியிடப்பட்டுள்ளது என குறிப்பிட்டிருந்தார்.

இயல்பாகவே இந்த குற்றச்சாட்டுகள் தவறானவை. இலங்கையின் மனித உரிமை பாதுகாவலர் என்ற அடிப்படையில் எனது பணிகளிற்கு அவதூறு கற்பிக்கும் நோக்கத்தை கொண்டவை என ஜஸ்மின் சூக்கா நீதிமன்



றில் தாக்கல் செய்திருந்த மனுவில் தெரிவித்திருந்தார்.

மனித உரிமை ஆர்வலர்கள் பாதுகாவலர்களை பயங்கரவாதிகள் அல்லது அவர்களின் ஆதரவாளர்கள் என முத்திரை குத்தும் நடவடிக்கைகளில் உலகம் முழுவதும் உள்ள ஒடுக்குமுறை அரசாங்கங்கள் ஈடுபட்டுள்ளன என்பது நீதிமன்றத்திற்கு தெரியும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் இலங்கையை சேர்ந்த சட்டத்தரணி தான் தனது அறிக்கையில் ஜஸ்மின் சூக்காவிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த விடயங்களை நீக்க மறுத்ததுடன் ஜஸ்மின் சூக்காவிற்கு எதிராக நீதி மன்றில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. இறுதியில் அவர் ஜஸ்மின் சூக்காவிற்கு குறிப்பிடத்தக்க இழப்பீட்டினை செலுத்த இணங்கியுள்ளதுடன் தனது கருத்துக்களை வாபஸ் பெறுவதற்கும் இணங்கியுள்ளார்.

நீதிமன்றம் அவர் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இணையத்தில் மன்னிப்பு கோரவேண்டும் என உத்தர விட்டுள்ளது.

# 13 பிளஸ் யோசனையால் ஒற்றையாட்சிக்கு பாதிப்பு இல்லை - பஸில்

13 பிளஸ் யோசனையால் இலங்கையின் ஒற்றையாட்சிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார். சமஷ்டி அடிப்படையிலான தீர்வு குறித்து ஜனாதிபதி தமிழ்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார் எனக் கூறப்படுகின்றது. ஆனால் ஒற்றையாட்சியையே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஏற்கின்றது. எனவே, எல்லை மீறிய அதிகாரப் பகிர்வை எதிர்ப்பீர்களா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பஸில் ராஜபக்ச இவ்வாறு கூறினார். 13 பிளஸ் என்ற யோசனையை மஹிந்த ராஜபக்சவே முதன் முதலில் முன்வைத்தார். அதன்மூலம் நாட்டின் ஒற்றையாட்சி உறுதிப்படுத்தப்பட்டது. சொல்லளவில் இருந்த ஒற்றையாட்சியை மஹிந்த ராஜபக்சவே நிஜமாக்கினார். நாட்டின் தேசியக் கொடியை எங்கு வேண்டுமானாலும் ஏற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினார். ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள்ளேயே நடவடிக்கை இடம் பெறும். எனவும் பஸில் ராஜபக்ச குறிப்பிட்டார்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# ஒற்றையாட்சிக்குள் அனைத்து இன மக்களும் ஒன்றாக வாழக்கூடிய அதிகாரப் பகிர்வு!

# ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு!

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்க்ததில் ஒற்றையாட்சிக்குள் அனைத்து இன மக்களும் ஒன்றாக வாழக்கூடிய அதிகார பகிர்வை ஏற்படுத்துவோம்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டாவது கட்சி சம்மேளனம் கொழும்பு - கெம்பல் மைதானத்தில் 11 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

கோட்டா கோஹோம், பசில் கோஹோம் என்கிற பெரிய புரட்சியை ஐக்கிய மக்கள் சக்தி செய்தது. குறுகிய காலத்துக்குள் பதிவு செய்யப்பட்டுக் கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு பாரிய வெற்றி கிடைத்தது.

மேலும் இனப் பிரச்சினைக்கு தீர்வாக ஒற்றையாட்சிக்குள் பிளவுபடாத இலங்கைக்குள், அதிகாரங்களைப் பகிர நடவடிக்கை எடுப்போம். அதேபோல் இளைஞர்கள், பெண்கள், சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அரசியலமைப்பில் அடைப்படை உரிமைக்குள் சேர்ப்போம். மக்களுக்கு எதிரான தீர்மானங்களுக்காக மக்களோடு ஒன்றிணைந்து வீதிக்கு இறங்குவதற்கு இந்த அரசாங்கத்திடம் ஒருபோதும் அனுமதி கேட்டுக்கொண்டிருக்கப்போவதில்லை.

மேலும் எமது அரசாங்கத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு தேசியப் பாதுகாப்பை உறுதி செய்யக் கூடியப் புதியச் சட்டம் கொண்டு வருவோம். லசந்த விக்ரமதுங்க, பிரகீத் எக்னெலிகொடவை தாராளவாதிகள் மறந்து விட்டனர். ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அவர்களுக்கு நீதி கிடைக்கும்.



நாட்டிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணங்களை மீள நாட்டுக்குக் கொண்டு வருவேன். அத்துடன் சட்டம் ஒழுங்கை ஏற்படுத்தவும் ஊழல் மோசடிகளை இல்லாதொழிக்கவும் பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகா தலைமையில் நடவடிக்கை எடுக்கப்படும். போராட்டத்தால் கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்கள் பக்கமாக ஐக்கிய மக்கள் சக்தி நிற்பது மாத்திரமன்றி, போராட்டக்காரர்களால் முன்னெடுத்தப் புரட்சியை கையில் எடுத்து எதிர்காலத்தை நோக்கி பயணிப்போம் எனவே வங்குரோத்து அடைந்துள்ள நாட்டை கட்டியெழுப்ப முடியுமான நாட்டுக்கு உள்ள ஒரே தீர்வு, ஒரே மாற்றம் ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமாகும்.


அதனால் புதிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அதற்காக அரசாங்கம் ஆரம்பமாக உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்த வேண்டும் என கேட்டுக கொள்கின்றேன் என்றார்.

## இந்தியாவில் பிறந்த அகதிகளின் குழந்தைகளுக்குக் கடவுச்சீட்டு வழங்கப்படுமா? இந்திய நாடாளுமன்றத்தில் தமிழிச்சி தங்க பாண்டியன்

தென்சென்னை தொகுதியின் மக்களவை உறுப்பினர், தமிழச்சி தங்க பாண்டியன் இந்தியாவில் பிறந்த இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்கு இந்திய கடவுச்சீட்டு வழங்கப் படுமா? என நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பிள்ளார். நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் டிசம்பர் 7ம் தேதி தொடங்கி நடைப்பெற்று வருகிறது. இந்நிலை யில் மக்களவையில் கேள்வி நேரத்தின் போது பேசிய திமுக தென்சென்னை தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன், இனப்படு கொலையால் பாதிக்கப்பட்டு இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு வந்த பல்லாயிரக் கணக்கானோர் அகதிகளாக பல்வேறு அகதிகள் முகாமில் உள்ளனர். கடந்த 1980களில் கருப்பு ஜஜீலையின் போது, இலங்கையில் இருந்து வந்து திருச்சி அகதிகள் முகாமில் உள்ள கே.நளினி என்பவருக்கு உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப் படையில் பாஸ்போர்ட் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்கு இதற்கு முன்னர் பாஸ்போர்ட் வழங்கப்பட்டுள்ளதா? இனி மேல் வழங்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா? என மத்திய வெளியுறவுத்துறைக்கு தமிழச்சி தங்க பாண்டியன் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்து பேசிய மத்திய



வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வீ.முரளீதரன், இந்த விவகாரம் குறித்து திமுக நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியனை பின்னர் சந்தித்து விரிவாக ஆலோசனை செய்வதாக மக்களவையில் உறுதியளித்துள்ளார்.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

கனடா முத்துமாரியம்மன்

அங்கத்துவர்களுக்கான வருடாந்த மகாசபை கூட்டம்.

22ஜனவரி2023 ஞாயிற்றுக்கிழமை கனடா முத்துமாரியம்மன் கலாச்சார மண்டபத்தில் மாலை 2 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.அங்கத்தவர்கள் அனைவரும் மாதாந்த சந்தா பணத்தை செலுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

16 நவம்பர் 2022 புதன்கிழமை முதல் ஐயப்பன் மண்டல பூஜை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஐயப்ப படிகட்டுப் பூஜை செய்ய விரும்பும் பக்தர்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

08 டிசம்பர் 2022 வியாழக்கிழமை:- விநாயகர் சஷ்டி விரதம் நடைபெறுகின்றது. பிள்ளையாருக்கு பூஜை செய்ய விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

### 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல்!
### தமிழ் மக்களின் நீடிக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு!
### இணக்கம் எட்டிய அரசமைப்பு தொடர்பில் பேசுதல்!

# தமிழ்பேசும் தரப்புக்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தல்!



தமிழ் மக்கள் மத்தியில் இன்றும் நீடிக்கும் காணி ஆக்கிரமிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, அரசியல் கைதிகள் விடுதலை ஆகிய பிரச்னைகளுக்கு தீர்வு காணல், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல், புதிய அரசமைப்பு தொடர்பில் ஏற்கனவே எட்டப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஓர் இணக்கப்பாட்டை அடைதல் ஆகிய விடயங்களை ஜனவரி 31ஆம்திகதிக்கு முன்னர் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை ஜனாதிபதி தரப்பு செய்ய வேண்டும் என்று தமிழ் பேசும் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இனப் பிரச்னைக்கு தீர்வு எட்டும் நோக்குடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்த சர்வகட்சி கூட்டம் 13 டிசம்பர் 2022 செவ்வாய்க் கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

சுமார் இரண்டு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பில் வடக்கு – கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக்கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி,தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், மலையகத் தமிழரை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் முற்போக்கு கூட்டணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தென்னிலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் கலந்து கொண்டன.

ஜனாதிபதியின் உரையை தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். தமிழர் பகுதிகளில் தற்போதும் நீடிக்கும் காணிகள் ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டும். ஏற்கனவே அபகரிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப் பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உடனடியாக நீதி கிடைக்க வேண்டும். அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற விடயங்களை முன்வைத்தார்.

இதைத் தொடர்ந்து, முன்னாள் நீதிஅமைச்சரும் இப்போதைய வெளிவிவகார அமைச்சருமான அலி சப்ரி, தற்போதைய நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மூலமாக செய்யப்பட்ட விடயங்களை முன்வைத்தனர். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்கப்படுகிறது. அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் சட்ட விவகாரங்களை கருத்தில் கொண்டே அவர்களை விடுதலை செய்ய முடியும். அவர்களை படிப்படியாக விடுதலை செய்ய முடியும் என்றுகூறினர்.

அவர்களின் கருத்துக்கு பதில் உரைத்த சம்பந்தன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அவர்களின் உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும். அவர்கள் எதிர்பார்ப்பதும் அதனைத் தான் என்று கூறினார். தொடர்ந்து, மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும், பிளவுபடாத இலங்கைக்குள் – உள்ளக சுயநிர்ணயத்துடன் கூடிய சமஷ்டி வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு உச்ச அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்று சம்பந்தனும், விக்னேஸ்வரனும் வலியுறுத்தினர். தொடர்ந்து இந்த அனைத்து விடயங்களையும் எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னதாக நடைமுறைப்படுத்த ஆரம்பிக்க வேண்டும் என்று சம்பந்தன் வலியுறுத்தினார்.

இதன் பின்னர் கருத்து வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 13ஆவது திருத்தச் சட்டத்தை நான் ஆரம்பம் முதலே வலியுறுத்தி வருகிறேன். சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் உட்பட எல்லோரும் இப்போது தான் இதை வலியுறுத்துகின்றனர். இதை வரவேற்கிறேன்'' என்றார்.

இதைத் தொடர்ந்து சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவுப்ஹக்கீம், 13ஆம் திருத்தச் சட்டத்தைமுழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்றும் வலியுறத்தினார். இதன் பின்னர் படிப்படியாகமுன்னேற்றங்களை ஏற்படுத்த முடியும் என்றும் கூறினார்.

13ஆம் திருத்தத்துக்கு ஆதரவாக கருத்தை வெளியிட்ட மனோ கணேசன் மலையக தமிழ் மக்களின் பிரச்னை களுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் கூறினார். எதிர்க்கட்சி தலைவரான சஜித் பிரேமதாஸ, 13ஆம் திருத்தத்துக்கு ஆதரவளித்ததுடன், பிளவுபடுத்த முடியாத இலங்கைக்குள் – ஒற்றையாட்சிக்குள்ளேயே அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று கூறினார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதி நிதித்துவப்படுத்தியவர்களில் ஒருவரான அங்கஜன் இராமநாதன், சமஷ்டி மூலம் இனப் பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும். அதேசமயம், அபிவிருத்தி பணிகளும் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

சுற்றாடல் துறை அமைச்சரான நசீர்அஹமட் மாத்திரம் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படக் கூடாது என்று எதிர்ப்பைக் கிளப்பினார்.

சுமந்திரன் எம். பி., அரசமைப்பு விடயத்தை ஆரம்பத்தில் தொடங்க வேண்டியதில்லை. இது தொடர்பாக பல அறிக்கைகள் – இணக்கப்பாடுகள் – வரைவுகள் கூட இருக்கின்றன. அவற்றையெல்லாம் சேர்த்து ஓர் இணக்கப்பாட்டை எட்டி தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும்.

ஜனவரி மாதத்திலேயே இந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டும். ஏனெனில் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப் பிரச்னைக்கு தீர்வு என்ற காலக்கெடுவைவைத்திருக்கிறார். எனவே, ஜனவரியில் முடிவு இணக்கம் ஒன்று எட்டப்படவேண்டும். இது மிகக் குறுகிய காலம் என்றாலும் அனைவரும் முயற்சிப்போம் என்றார்.

இந்த சந்திப்பு தொடர்பில் ஜனவரியில் ஒரு திகதியில் கூடிப் பேசுவது என்றுஅரச தரப்பில் தெரிவிக்கப் பட்டது. மகிந்த மௌனம் இந்தச் சந்திப்பில் பொது ஜன பெரமுன தரப்பிலிருந்து மகிந்த ராஜபக்ஷ,சாகர காரியவசம் ஆகியோர் பங்கேற்ற போதிலும் அவர்கள் எந்த கருத்தையும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இந்தியா எங்களுக்குத் தேவை!
## - அன்ரன் பாலசிங்கம் -

விடுதலைப் புலிகளின் மதியுரைஞரென்று அறியப்பட்ட அன்ரன் பாலசிங்கம் காலம் சென்று 16 வருடங்களாகின்றன. 2005இல் மீண்டும் யுத்தம் ஆரம் பிக்கப் பட்ட நிலையில், நோய்வாய்ப்பாட்டிருந்த பாலசிங்கம் 14 டிசெம்பர் 2006இல் காலமானார். மீண்டுமொரு யுத்தத்துக்கு செல்வது தொடர்பில் மாறுபட்ட பார்வையைக் கொண்டிருந்த பாலசிங்கம், விடுதலைப் புலிகள் அமைப்பை காப்பாற்றும் முயற்சியில் இறுதி வரையில் ஈடுபட்டிருந்தார். 2006 ஜீன் மாதம், இந்திய தொலைக்காட்சியான **NDtv** இற்கு வழங்கிய நேர்காணலில், விடுதலைப் புலிகள் அமைப்பின் கடந்த கால தவறுகளுக்கு மன்னிப்பு கோரியிருந்தார். யுத்தத்தை நிறுத்தினால் மட்டுமே விடுதலைப் புலிகள் மூச்சுவிட முடியும் – யுத்தத்தை நிறுத்த வேண்டுமாயின், இந்தியாவின் ஆதரவின்றி அதனை சாத்தியப்படுத்த முடியாதென்பதை பாலசிங்கம் தெளிவாகப் புரிந்திருந்தார்.

இதன் விளைவாகவே, மேற்படி தெலைக்காட்சி நேர்காணல் மூலம் புதுடில்லியுடன் உறவுகளை ஏற்படுத்துவதற்கு பாலசிங்கம் முயற்சித்திருந்தார். குறித்த நேர்காணலில், இந்திய படைகளுக்கு எதிராக இரண்டு வருடங்கள் போரிட்டது, பின்னர் இடம் பெற்ற ராஜீவ் காந்தியின் படுகொலை ஆகியவற்றை குறிப்பிட்டு, அதற்கு வருத்தம் தெரிவித்திருந்தார். கடந்த காலத்தை பெருந்தன்மையுடன் பின்னுக்கு வைத்து, இந்தியா மீளவும் ஈழத் தமிழர் பிரச்னையில் தலையீடு செய்ய வேண்டுமென்று கோரினார்.

ஒருவேளை அவர் இன்னும் சில வருடங்கள் இருந்திருந்தால் ஏதோவொரு வகையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி புலிகளைக் காப்பாற்றும் முயற்சியில் இந்திய கதவுகளை திறந்திருப்பார் என்றும் ஓர் அபிப்பிராயம் உண்டு. இது ஓர் ஊகம் மட்டுமே.

இலங்கையின் சமாதான ஏற்பாடுகளுக்கு தலைமை தாங்கிய எரிக் சொல்ஹெய்ம் ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் குறிப்பிடுவார். அதாவது, விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவை சரியாகப் புரிந்து கொள்ளவே இல்லை. பாலசிங்கம் இதனைப் புரிந்து கொள்ளாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை ஆனால், தத்துவாசிரியர் என்னும் போர்வையை போட்டிருந்ததால் அவரால் அதிகம் பேசமுடியாமல் போயிருக்கலாம். 2002இல், இந்திய ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு பாலசிங்கம் நேர்காணல் ஒன்றை வழங்கியிருந்தார். அதில் – இந்தியா ஒரு பிராந்திய மேலாதிக்க சக்தி, அதனை எட்ட வைப்பதற்கு நாங்கள் விரும்ப முடியாது. எங்களுக்கு இந்தியா தேவையென்று குறிப்பிட்டிருந்தார்.

நேர்காண்பவர் பிறிதொரு கேள்வியை முன்வைக்கின்றார். 1989 – 90இல், நீங்கள் பிரேமதாஸவுடன் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்டீர்கள், அப்போது, இது எங்களின் உள்ளக பிரச்னை – இதில் இந்தியாவுக்கு ஓர் இடமும் இல்லையென்று கூறினீர்களே, பின்னர் ஏன் இப்போது இந்தியா தேவையென்று கூறுகின்றீர்கள்?

பிரேமதாஸவோடு இணக்கப்பாட்டுக்கு சென்ற போது, நாங்கள் (புலிகள்) அழிவின் விளிம்பில் இருந்தோம். பிரபாகரன் தப்பிப் பிழைப்பதற்காக சண்டையிட்டுக் கொண்டிருந்தார் பிரேமதாஸவோடு ஓர் உடன்பாட்டுக்கு சென்றால் முழுமையான அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளலாமென்று எண்ணினோம். ஆனால், இப்போது நிலைமைகள் மாறி விட்டன – நாங்கள் இந்தியாவின் பங்களிப்பை ஏற்றுக் கொள்ள விரும்புகின்றோம். விடுதலைப் புலிகள் அமைப்பைப் பொறுத்தவரையில், இவ்வாறனதொரு விடயத்தை பாலசிங்கத்தால் மட்டுமே கூறமுடியும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு தோல்வி அடைந்திருந்தாலும் கூட, விடுதலைப்புலிகள் சார்பில் ஓர் இராஜதந்திரியாகவே பாலசிங்கம் அடையாளம் காணப்பட்டிருந்தார். இந்த பின்புலத்தில் நோக்கினால், அன்றைய சூழலில் ஒரு தமிழ் இராஜதந்திரி என்னும் அந்தஸ்தத்தை பாலசிங்கம் பெற்றிருந்தார். பாலசிங்கத்தை நினைவுகொள்ளும் சூழலில், தமிழ்த் தேசிய கட்சிகள் மீளவும் அரசாங்கத்துடன் பேச்சு ஒன்றில் பங்கு கொள்வதற்கு தங்களை தயார் செய்கின்றனர். இந்தியாவின் மத்தியஸ்தத்தை கோர வேண்டுமென்னும் கோரிக்கைகளை பரவலாகக் காண முடிகின்றது. பாலசிங்கம் தனது உரையொன்றில் ரணிலை ஒரு நரியென்றும், அவரை விடவும் மகிந்த பரவாயில்லை என்றும் கூறுகின்றார்.

ஆனால், இனப் பிரச்சனையை தீர்ப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட இரண்டு வரலாற்று சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சியிலிருந்தது. உண்மையில் ரணில் போன்றவர்களை எதிர் கொள்ளுவதற்கும் கையாளுவதற்கும் தான் இராஜதந்திர ஆற்றல் தேவை – தமிழ் இராஜதந்திரிகள் தேவை. அரசியல் என்பது நரித்தனமாக காட்சியளிக்குமாயின் அதனை கண்டு (19ம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக மலையக, முஸ்லிம் கட்சிகளுடன் பேசுவது காலத்தை வீணடிக்கும்-தவராசா

தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் பேசப்படுகின்ற சூழலில் மலையகக் கட்சிகள் மற்றும் முஸ்லிம் கட்சிகளுடன் பேசவுள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரி வித்திருக்கின்றார்.

இதனை தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்றுள்ளன. ஆனால் இது காலத்தை வீணடிக்கும் செயல்பாடாகும் என்று கூறியிருக்கிறார் இலங்கை தமிழரசுகட்சியின் கொழும்பு கிளை தலைவரும் சட்டத் தரணியுமான கே. வி. தவராசா.



இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில், இலங்கையில் சிறுபான்மை மக்களின் கட்சிகளுக்கும் தேசிய அரசியல் செய்யும் பெரும் பான்மைக் கட்சிகளுக்கும் மாறுபட்ட அரசியல் கொள்கைகளும் நிகழ்ச்சி நிரலும் உண்டு என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

கடந்த கால வரலாறு நமக்குப் பல எடுத்துக் காட்டுகளை சொல்லித் தரத் தவறவில்லை. தமிழ் மக்களின் கட்சிகளைப் பொறுத்தமட்டில் அதிலும்கூட பல்வேறு மாறுபட்ட கருத்தியல் தளம் இருப்பதை நாம் மறுக்க முடியாது.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கும் மலையகத் தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கும்கூட வேறுபாடு இருக்கின்றது என்பதையும் கூட வரலாறு தெளிவான சான்றுகளுடன்நிரூபிக்கின்றது.

1977ஆம் ஆண்டு தமிழீழத்துக்கான அரசியல் ஆணையை தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியாக இணைந்து கேட்ட தேர்தலில் மக்கள் வழங்கினார்கள்.

அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார் ஆனாலும், கூட்டணியின் ஒரு தலைவரான எஸ். தொண்டைமான் யாரும் எதிர்பாராத நிலையில் ஆளும் கட்சிக்கு ஆதரவு நிலையெடுத்து அமைச்சுப் பதவி பெற்றார். அதற்குக் காரணம் மலையகத் தமிழர்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை தமிழீழ ஆணைக்குள்ளோ அல்லது எதிர்க்கட்சி அரசியல் நிரலுக்குள்ளோ நின்று நிவர்த்தி செய்யமுடியாது.

இதன் பின்னர் அரசாங்கம் சார்ந்த அரசியல் நிலைப்பட்டையே எடுக்கும் வண்ணம் அவரின் கட்சி செயல்படத் தொடங்கி இன்று வரை அது தொடர்கின்றது. அது போன்றே தமிழ் பேசும் சிறுபான்மை முஸ்லிம் மக்களின் அரசியல் கட்சிகள் எல்லா காலமும் ஏதோவொரு விதத்தில் அரசாங்கத்துடன் இணைந்தே தமது செயல்களை முன்னெடுத்து வருகின்ற தன்மையை நாம் அவதானிக்கலாம்.

நிலைமைகள் இப்படி இருக்க தேசிய அரசியல் கட்சிகளுக்கு சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் உதவி அல்லது ஆதரவு எதற்குத் தேவை என்ற கேள்விக்கு மிக இலகுவான பதிலைச் சொல்ல முடியும். ஜனாதிபதித் தேர்தல் ஒன்று வருமானால் அதில் தமது வேட்பாளருக்கு சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கான நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஒரு பொதுஅறிவித்தல் விடுக்கும் வரை தான். அதைத் தாண்டி வேறு எதிர்பார்ப்புகள் தேசியக்கட்சிகளுக்குத் தேவைப்படுவதில்லை.

நிலைமைகள் இப்படியிருக்க சிறுபான்மைகளின் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்நாட்டில் பொது அரசியல் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பது என்பது காலத்தை வீணடிக்கும் ஒன்றாகும். நடைமுறையில் சாத்தியமில்லாத ஒன்றை முன்னெடுப்பதை விட தமிழ் தேசிய பரப்பிலுள்ள அனைத்துக் கட்சிகளும் சாத்தியமான வேறு அரசியல் செயல்பாடுகளை முன்னெடுப்பது சாலச் சிறந்தது. மக்களை காலத்துக் காலம் ஏமாற்றும் வித்தைகளில் ஒன்றுதான் இணைந்த

சிறுபான்மை அரசியல் என்பது. எனவே, தேவையற்ற அலங்காரத் திசை திருப்பல்களுக்குள் அகப்பட்டுக் கொண்டு காலத்தை வீணடிக்காமல் தமிழ் மக்கள் அவதானமாகச் செயல்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்**
**30வது ஆண்டு விழா:-**
**23 ஏப்ரல் 2023**
**“சங்கீத சங்கமம் 2023”**


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# காணாமல் போனவர்களை நீங்களே கொன்று விட்டீர்கள்!
# பொறுப்புக் கூறலை நிச்சயமாக நிறைவேற்றுங்கள் - சம்பந்தர்

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரையும் நீங்கள் கொன்று விட்டீர்கள் என்பது எமக்குத் தெரியும். ஆனால் என்ன நடந்ததென்ற உண்மை கண்டறியப்பட்டு பொறுப்புக்கூறல் நிச்சயமாக நிறைவேற்றப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்ததார்.



இந்தக் கூட்டத்தை தலைமை தாங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில நிமிடங்கள் உரையாற்றினார். இனப்பிரச்சினை தீர்வுக்கான அவசியத்தை தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கான தீர்விற்காக ஜனாதிபதி அழைத்த சர்வகட்சி கூட்டம் 13 டிசம்பர் 2022 செவ்வாய்க் கிழமை ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் மாலை இடம் பெற்றது.

பின்னர் அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ச, அலி சப்ரி ஆகியோர் உரையாற்றினர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரத்தில் அரச தரப்பினால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை அவர்கள் விபரித்தனர். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் இழப்பீடுகள் வழங்க நடவடிக்கை எடுப்பதாக அலிசப்ரி தெரிவித்தார்.

குறித்த கூட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா .சம்பந்தன்,

சந்திப்பு மிகவும் அருமையான கூட்டமாக இடம் பெற்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரையும் நீங்கள் கொன்று விட்டீர்கள் என்பது எமக்குத் தெரியும். ஆனால் என்ன நடந்ததென்ற உண்மை கண்டறியப்பட்டு பொறுப்புக்கூறல் நிச்சயமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றார். யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்களின் பின்னர் தான் நல்லிணக்க கூட்டத்தை கூடுகின்றீர்கள் . இதற்கு நாங்கள் ஒத்துழைப்புகளை வழங்கத் தயார் என சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும். காணாமல் போனோர் தொடர்பில் இனி கதைக்க வேண்டாம். காணாமல் போனவர்களை கொன்றது நீங்கள். அதனால் இதைப் பற்றி கதைப்பதில் பிரியோசனம் இல்லை. அதனால் இந்த விடயத்திற்கு முடிவு கொடுப்பதைப் பற்றி யோசனை செய்யுங்கள். காணாமல் போனோர் காணாமல் போனோர் என்று தெரிவித்து காலத்தை நீடிக்கவேண்டாம்.

தற்போது சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும் விடுவியுங்கள் என்று எடுத்துக் கூறியுள்ளேன்.

அரசியல் தீர்வு, காணி தொடர்பான பிரச்சினை, அனைத்து மாவட்டங்களிலும் காணிகள் இராணுவத்தினர், வனவளத்திணைக்களம், தொல்லியல் திணைக்களம் , மகாவலி திட்டத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் மாசி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் முழுக் காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா . சம்பந்தனர் மேலும் தெரிவித்துள்ளார். இந்தக் கூட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சுமந்திரன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்த் தரப்புடன் முதற் கட்டப் பேச்சுவார்த்தை நிறைவு!
# சுமந்திரன் - மனோகணேசன் - விக்கி என்ன சொல்கிறார்கள்?

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள், அதிகாரப் பகிர்வு, புதிய அரசியலமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு சிறிலங்கா அதிபர் ரணில் விக்ரமசிங்க இணங்கியுள்ளதாக 13 டிசம்பர் 2022 செவ்வாய் கிழமை கலந்துரையாடலில் பங்கேற்ற தமிழ் தலைமைகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனாலும், அடுத்து ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னதாக இவை தொடர்பில் பேசி இறுதி தீர்மானம் எடுப்போம் எனும் முடிவோடு அதிபர் இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். அதிபருடனான சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.



நாங்கள் மூன்று விடயங்கள் குறித்து பேசினோம். முதலாவதாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை, நில ஆக்கிரமிப்பு போன்ற விடயங்கள் குறித்து பேசினோம்.

இது தொடர்பில் உடனடியாக உரியவர்களுடன் பேசி, ஜனவரி மாசத்திற்குள் உரிய தீர்வை வழங்குவதாக அதிபர் ரணில் விக்ரமசிங்க உறுதி அளித்திருக்கின்றார்.

இரண்டாவதாக, ஏற்கனவே சட்டத்திலும் அரசியலமைப்பிலும் இருக்கின்ற அதிகார பகிர்வு சம்பந்தமான விடயங்களை எப்படியாக நடைமுறைப்படுத்துவது? மாகாண சபைத் தேர்தலை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பிலும் கருத்துக்களை முன் வைத்திருந்தோம்.

அதற்கு அதிபர் ஜனவரி மாத பேச்சின் போது அது தொடர்பான தீர்மானங்களை எடுக்கலாம் என்று பதில் கூறியிருக்கின்றார்.

மூன்றாவதாக, நீண்ட காலமாக இருக்கப் போகின்ற புதிய அரசியலமைப்பு சம்பந்தமான விடயங்களையும் எடுத்துக்கூறி இருந்தோம். அதிலே அதிகாரங்களை பகிர்வது உட்பட எல்லா விடயங்களையும் உள்ளடக்கியதாக நாங்கள் கோரிக்கைகளை முன் வைத்தோம்.

இதற்கு அதிபர் கூறிய பதில் இதற்காக நாங்கள் ஆரம்பத்தில் இருந்து தொடங்க வேண்டியது இல்லை. இது தொடர்பாக ஏற்கனவே பல அறிக்கைகள் இருக்கின்றன. இணக்கப்பாடுகள் இருக்கின்றன. வரைபுகள் கூட இருக்கின்றன. ஆகவே அவற்றை எல்லாம் சேர்த்து எப்படியான விதத்தில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவது என்பது குறித்து ஜனவரி மாதத்திலேயே நாங்கள் தீர்மானம் எடுக்க வேண்டும் எனக் கூறியிருக்கிறார்.

ஏனென்றால், அடுத்த வருடம் இடம் பெற இருக்கின்ற 75 ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு முன்னதாக நாட்டிலே இன நல்லிணக்கம் ஏற்படுமா? இல்லையா? என்பது குறித்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று அவரே ஒரு காலக்கெடுவை வைத்திருக்கின்றார்.

ஆகவே ஜனவரி மாதத்தில் இடம்பெற இருக்கின்ற அந்தப் பேச்சு வார்த்தையில் இருந்து நாட்டிலே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமா? அல்லது முடியாதா என்று ஒரு முடிவுக்கு வரலாம்.

பெப்ரவரி நான்காம் திகதிக்கு முன்னதாக தான் இது குறித்த முடிவை அறிவிக்க வேண்டும் என அதிபர் எம்மிடம் கூறி இருக்கின்றார். ஆகவே மிகவும் குறைந்த கால கட்டமாக இருந்தாலும் அந்தக் காலகட்டத்தினுள் இந்த விடயங்கள் சம்பந்தமாக பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு அனைவரும் முயற்சி எடுப்போம் என்று கூறி இருக்கின்றோம் என்றார்.



அதிபருடனான சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குறிப்பிடுகையில் குறிப்பாக இந்த நாட்டிலே பொதுவான ஒரு இணக்கப்பாடு இருக்கின்றது.

அதிபர் ரணில் விக்ரமசிங்க, முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவர்கள் மத்தியிலே பெரும்பாலான இணக்கப்பாடு இருக்கிறது. அவையே சிறந்த இணக்கப்பாடு.

பெப்ரவரி நான்காம் திகதிக்கு முன்னதாக தீர்வு தருவதாக அதிபர் கூறியிருக்கின்றார். அதற்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கின்றது. ஆகவே புதிய விடயங்களை இப்பொழுது பேச முடியாது.

இதற்கு ஒரே முடிவு 13ஆவது திருத்தம் தான். அது முழுமையான தீர்வு அல்ல. ஆனாலும், அதில் இருந்து ஆரம்பிப்போம். அதிலிருந்து ஆரம்பித்து உங்களுடைய நேர்மையை காட்டுங்கள் என்று அதிபரிம் கூறி இருக்கிறேன் என்றார்.

அதிபருடனான சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும்



நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவிக்கையில் பல தமிழ் கட்சிகளினுடைய தலைவர்கள், சிங்கள – முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் என எல்லோரும் இந்த கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்தோம்.

அதிபர் 75ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் இனப் பிரச்சினைகளை தீர்ப்பது சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதனை எவ்வாறு செய்வது என்பது தொடர்பில் எங்களிடம் அதிபர் கேட்டிருந்தார்.

நாம் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, நில அபகரிப்பு போன்ற முக்கிய பிரச்சினைகளை எடுத்துக் கூறினோம். வடக்கு கிழக்கிலிருக்கும் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை உடனே தீர்க்க வேண்டும் என்பது எமது முதலாவது கோரிக்கையாக இருந்தது.

இரண்டாவது சட்டத்தின் வாயிலாக ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளை நாங்கள் பெறக்கூடிய விதத்தில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதாவது 13ஆவது திருத்தச் சட்ட நடைமுறை, அதற்கமைவான மாகாண சபைகள் இயக்கம்.

அடுத்ததாக இதுவரை காலமும் பல விதமான ஆவணங்களை நாம் தயாரித்திருக்கின்றோம். தமிழ் மக்களினுடைய பிரச்சினைகளை தீர்ப்பது சம்பந்தமாக எவ்வாறு அவற்றை முன்வைத்து அவற்றைப் படித்து பார்த்து, எவ்வாறான (22ம் பக்கம் பார்க்க)

# சென்னையில் இருந்து பலாலி சென்ற விமானம் தரையிறங்கியது! அதிகாரிகள் விமானிகள் "கேக்" வெட்டிக் கொண்டாட்டம்!



யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்திலிருந்து சென்னைக்கான விமான சேவைகள் கடந்த 12 டிசம்பர் 2022 திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகியது. இதன்படி அலையன்ஸ் எயார்லைன்ஸ் என்ற விமான சேவை நிறுவனம் சென்னையில் இருந்து பலாலிக்கு விமான சேவையை ஆரம்பித்தது.

வாரமொன்றுக்கு இந்த விமான சேவை நிறுவனத்தினால் நான்கு தினங்களுக்கு சேவைகள் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பயணியொருவர் 20 கிலோ வரை பொருட்களை விமானத்தில் எடுத்துச் செல்ல முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பலாலி விமான நிலையப் பணிகள் கடந்த காலங்களில் இடை நிறுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில் மீண்டும் விமான சேவை ஆரம்பமாகியது.

இந்தியாவின் அலையன்ஸ் எயார் லைன்ஸ் விமானம் சென்னையில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் திங்கட்கிழமை (12) முற்பகல் 11.30 மணிக்கு தரையிறங்கியது.

இந்த விமானத்தில் ஆரம்ப நிகழ்வுக்கான இந்திய பயணிகள் 28 பேர் வருகை தந்தனர். இந்தியா பிரதிநிதிகளை இலங்கை அமைச்சர் மற்றும் இலங்கை அதிகாரிகள் வரவேற்றனர்.

இதையடுத்து யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் அலையன்ஸ் எயார் லைன்ஸ் (**Alliance Air**) விமானிகளால் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ். மாவட்ட செயலாளர் க.மகேசன் சுற்றுலா துறை பிரதிநிதிகள், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இது இவ்வாறிருக்க தொடர்ச்சியான பல்வேறு முயற்சிகளின் பலனாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பலாலிக்கான விமான சேவையை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக இடை நிறுத்தப்பட்ட பலாலிக்கான விமான சேவை இன்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளமை, வடக்கு மாகாண மக்களுக்கு மாத்திரமன்றி கிழக்கு மற்றும் அநுராதபுரம் பொலனறுவை போன்ற வட மத்திய மாகாணங்களும் நன்மை பயக்கவுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், 'அடிப்படையான வசதிகளுடன் மட்டுப்படுத்தப்பட்டளவு சேவைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிக்கின்றன. விமான நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டம் கட்டமாக விஸ்தரிப்பதற்கு தேவையான நகர்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

இது தொடர்பாக, இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதுடன் அமைச்சரவையிலும் பிரஸ்தாபிக்கவுள்ளேன்.

இந்நிலையில், மக்கள் சரியான முறையில் இதனைப் பயன்படுத்துவார்களாயின், எதிர்காலத்தில் இந்தியாவிற்கான சேவைகள் விரிவுபடுத்தப்படும் என்பதுடன் ஏனைய நாடுகளில் இருந்தும் சேவையை முனனெடுப்பதற்கும் விமான நிறுவனங்கள் முன்வரும்.

இதன் மூலம், எமது பிரதேசத்தின் சுற்றாலாத்துறை வளர்ச்சியடைவதுடன் ,ஏற்றுமதி இறக்குமதி செயற்பாடுகளுக்கான நேரடி வாசலாகவும் பலாலி விமான நிலையம் செயற்படும். இது எமது மக்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காங்கேசன்துறைக்கும் பாண்டிச்சேரி மற்றும் காரைக்கால் போன்றவற்றிற்கு இடையிலான சரக்கு படகு சேவையை ஆரம்பிக்கும் தன்னுடைய முயற்சிகளும் விரைவில் சாத்தியமாகும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கத் தூதுவரின் காதல் வலையில் விழுந்தாரா கோத்தா? அம்பலப்படுத்தினார் முன்னாள் சகாவான விமல் வீரவன்ச!

முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்சவுக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலையை அடுத்து அவரது மிரிஹான வீட்டிற்கு சென்ற அமெரிக்க தூதுவர் ஜூலி சங், கோட்டாபயவிற்காக பிரார்த்தனை செய்தார். அன்று அமெரிக்க தூதுவருடனான கோட்டாபயவின் காதல் தான் தவறான முடிவுகளை எடுக்க வைத்ததாக உத்தர லங்கா கூட்டமைப்பின் தலைவர்,நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

11 டிசம்பர் 2022 இடம்பெற்ற வட இலங்கை கூட்டமைப்பின் கேகாலை மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில், கோட்டாபய ராஜபக்ச செய்த பெரிய தவறு கொழும்பில் உள்ள அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் ஜூலியாவின் பேச்சுக்களை கேட்டு அதற்கு அடிமையாகி இருந்தமை. ஜூலியா அம்மையார் கடந்த காலங்களில் கோட்டாபய ராஜபக்சவை தொடர்ந்தும் சந்தித்து வந்தார். அவற்றினை யாரும் கூற மாட்டார்கள் அதனை சொல்வதற்கும் பயம். கூறினால் ஏதும் நடந்து விடும் என்ற பயம்.

மிரிஹான வீட்டினை சுற்றி வளைத்து அடித்த நாள் உங்களுக்கு நினைவிருக்கும். அன்று இரவு ஜூலியா அம்மையார் மிரிஹான வீட்டிற்கு வந்து கூறுகிறார் மிஸ்டர் பிரசிடன்ட், உங்களுக்கு இவ்வாறு நடந்ததையிட்டு நான் பெரிதும் வருந்துகிறேன். நீங்கள் ஒரு பௌத்தர், நான் கத்தோலிக்கர். எனது நம்பிக்கையின் கீழ் பிரார்த்தனை செய்ய எனக்கு இடமளியுங்கள் எனக் கூறி மண்டியிட்டு ஜூலியா அம்மையார் இறைவனிடம் கோட்டாபய ராஜபக்சவுக்கு நிவாரணம் வழங்குமாறு பிரார்த்திக்கிறார், ஆமீன்..





கோட்டாபய ராஜபக்ச அடுத்த நாள் முன்னாள் அமைச்சர் ஒருவரிடம் கூறுகிறார், அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவரை பாருங்கள், நல்லவராக இருக்கிறார். இப்படிச் சம்பவம் ஒன்று நேற்று நடந்தது.. வீட்டிற்கு வந்து எனக்காக பிரார்த்தித்தார். யாரு இப்படிச் செய்வார்கள்?, அன்று ஆரம்பித்த காதல் தான் அடுத்த நாள், மறு நாள், அதற்கும் அடுத்த நாள் என இவ்வாறு தொடர்ந்தது.

ஏதும் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது இருவரும் கதைத்துக் கொண்டார்கள், இருவருக்குள்ளும் கதைகள் தீர்மானங்கள் பரிமாறப்படுகின்றன. **IMF** இற்கு செல்ல வேண்டாம் என்கிறார், பிரச்சினைகள் எழும் என்கிறார், அம்மையாரின் பேச்சில் மயங்கி அதனை செய்யாது ஆமோதிக்கிறார்.

அதிபர் செயலகத்திற்கு முன்னால் உள்ளவர்களை அகற்றவா போகிறீர்கள் எனக் கேட்கிறார்.. கோட்டாபய ஆம் என்று கூறுகிறார், உடனே அதனை செய்ய வேண்டாம்.. அப்படிச் செய்தால் **IMF** செயற்திட்டங்கள் வீணாகும் என்கிறார். அப்படியென்றால் அவ்வாறு செய்யாது இருக்கிறேன் என்கிறார். ஒரு பக்கம் நாட்டின் அதிபரை ஆட்டி வைத்தார், மற்றைய பக்கம் ஆர்ப்பாட்டத்தினை ஆதரித்தார். என தெரிவித்துள்ளார்.

# மகிந்தாவின் மனைவி செய்த மாபெரும் மோசடி! போட்டுத் தாக்கினார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இல்லாதொழித்து பெயரை மாத்திரம் வைத்துக் கொண்டு தேவைக்கு ஏற்ப அதனை மீண்டும் உருவாக்குவது ராஜபக்ஷக்களின் கனவுகளில் ஒன்றாக காணப்பட்டது. அவர்கள் ஆட்சிக்கு வரும் வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எவரும் திருடவில்லை. ஆட்சியில் இருந்தவர்கள் திருடியமையே நாடு இன்று வங்குரோத்து அடைய மிக முக்கிய காரணம் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் இடம் பெற்ற திருட்டு ராஜபக்ஷவின் மனைவி செய்த மிகப்பெரிய மோசடி யாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். எதிர்காலத்திற்கான மாற்றம் என்ற தொனிப் பொருளில் குருநாகல் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்

இன்று எமது நாட்டில் சுமார் 33 வீத மானவர்களுக்கு தொழில் இல்லை. பொருளாதாரம் முழுமையாக சரிவடைந்துள்ளது. முதற் தடவையாக இலங்கை வங்குரோத்து அடைந்து விட்டதாக சர்வதேசத்துக்கு அறிவித்தது. பயணம் செய்வதற்கு எரி பொருள் இல்லை. உண்பதற்கு உணவில்லை. மின்சாரம் இல்லை. கல்விச் செயற்பாடுகள் பூச்சிய மட்டத்திற்கு சென்று விட்டன. இந்த நாட்டில் அரசியலவாதிகளின் செயற்பாடுகள் முற்றிலும் பிழையானவை. ஆட்சியில் இருந்தவர்கள் திருடியமையே நாடு இன்று வங்குரோத்து அடைய காரணமாகும்.

இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளிட்டவற்றில் மோசடிகள் இடம்பெற்றன. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் வரை ஆட்சியில் உள்ளவர்கள் அனைவரும் மோசடியில் ஈடுபட்டனர். அன்று நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி செயல் திட்டத்தை நானேஆரம்பித்தேன்.

ராஜபக்ஷ அதில் 15 பில்லியனை ரூபாய் வரையில் கையாடல் செய்தார். பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் இடம் பெற்ற திருட்டு (22ம் பக்கம் பார்க்க)

# மீண்டும் சென்னை - பலாலி விமானச் சேவை

யாழ்நகரில் இருந்து

ஈழநாட்டிற்காக - பகிரதன் -

நீண்டகால இழுபறிகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்கும் இடையிலான விமான சேவை கடந்த திங்கட்கிழமை (12-12-2022) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக பலாலி விமான நிலையத்தைத் தயார் படுத்தும் வேலைகள் கடந்த சில வாரங்களாகவே இடம் பெற்று வந்தது.

காலந் தாழ்த்தப்பட்ட நிலையில், இப்போது பலாலி விமான நிலையம் போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டிருக்கின்றது. இறுதி வரையில் விமானம் வருமா என்பதே கேள்விக்குறியாக இருந்த நிலையில், விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பது முக்கியமான ஒரு திருப்பம் தான். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சிக்குரிய ஒன்று என்பதுடன், இந்தியாவுக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான ஒரு இணைப்பை இது ஏற்படுத்தியிருக்கின்றது. சுமார் மூன்று தசாப்தங்களாக மூடப்பட்டிருந்த பின்னர் 2019இல் புனரமைக்கப்பட்ட பலாலி விமான நிலையத்துக்கு, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் எனப் பெயர் மாற்றப்பட்டது. அதே ஆண்டு நபம்பர் 11ஆம் திகதி அலையன்ஸ் எயர் என்ற நிறுவனத்தினால் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது.



இருந்த போதிலும் சில மாதங்களிலேயே கொரோனா வரவலைக் காரணம் காட்டி 2020 முற்பகுதியில் இந்த விமான சேவை நிறுத்தப்பட்டது.

கொரோனா கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் சென்னை விமான நிலையத்திலிருந்து வழமையான விமான சேவைகள் கடந்த வருடத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. இருந்த போதிலும் சென்னை - யாழ்ப்பாணம் விமான சேவை மட்டும் ஆரம்பிக்கப்படவில்லை. இந்த சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று பல்வேறு தரப்புக்களிலிருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், இலங்கை அரசாங்கம் பல்வேறு காரணங்களைக் காட்டி அதனைத் தட்டிக்கழித்து வந்தது.




### இந்தியாவின் அழுத்தம்

பலாலி விமான நிலையத்தைத் திறப்பதன் மூலம் இந்தியப் பயணிகளை அதிகளவுக்குக் கொண்டு வர முடியும் என்பதும், அந்நியச் செலாவணியை அதிகளவுக்குக் கொண்டுவரக்கூடியதாக இருக்கும் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இதனை மீள ஆரம்பிப்பதற்கு திகதிகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஓடு பாதை போதுமானதாக இல்லை என்பது உட்பட பல்வேறு காரணங்கள் இலங்கை அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்டு இறுதி வேளையில் அவை ரத்துச் செய்யப்பட்டிருந்தன.

இந்தப் பின்னணியில் இந்தியாவின் கடுமையான அழுத்தம் காரணமாகவே இப்போது இந்த சேவையை மீள ஆரம்பிப்பதற்கு இலங்கை இணங்கியதாகத் தெரிகின்றது. இதனையடுத்தே சுமர் இரண்டரை வருடங்களின் பின்னர் அலையன்ஸ் எயர் விமான நிறுவனம் சென்னை - யாழ்ப்பாணம் விமான சேவையை ஆரம்பித்திருக்கின்றது.

வாரத்துக்கு மூன்று நாட்கள் இந்த சேவை இடம் பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இது இப்போது நான்கு நாட்களாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. இது உல்லாசப் பயணிகளுக்கும், திருத்தல யாத்திரையை மேற்கொள்பவர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. குறிப்பாக தற்போது ஐயப்பன் வழிபாட்டுக்காக பெருந் தொகையான பக்தர்கள் சென்னை ஊடாக சபரி மலைக்குச் செல்வதற்கு முற்பட்டிருப்பதையும் காணமுடிகின்றது.

### சிறியரக விமானம்

சென்னைக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையில் அலையன்ஸ் எயர் நிறுவனம் ஏ.டி.ஆர் என்ற சிறிய ரக விமானத்தையே தற்போது சேவையில் ஈடுபடுத்தியிருக்கின்றது. இதில் 64 ஆசனங்கள் மட்டுமே உள்ளன. முதலாவது நாளான திங்கட்கிழமை பயணிகளுக்கு விரிவான

## இது நம்ம யாழ்ப்பாணம் 10

அறிவிப்பு வெளியிடப்பட்டதமையாலும், பிரயாண முகவர்களுக்கும் இறுதி நாட்களிலேயே அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டமையாலும் பன்னிரெண்டு பயணிகள் மட்டுமே சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் வந்ததாகத் தெரிகின்றது. இருந்த போதிலும் எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என யாழ்ப்பாணத்திலுள்ள பயண முகவர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரக்கூடிய உல்லாசப் பயணிகள் மற்றும் யாத்திரிகர்களைக் கவர்வதற்கும், அவர்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் வடக்கில் உள்ள சில ஹொட்டல்களும், பிரயாண முகவர்களும் விரிவான ஏற்பாடுகளை இறுதி நேரத்தில் தான் செய்து கொண்டிருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. யாழ்ப்பாணத்தில் நல்லூர் நயினாதீவு, மன்னாரில் திருக்கேதீஸ்வரம், திருமலையில் திருக்கோணேஸ்வரம் போன்ற கோவில்கள் தமிழகத்திலுள்ள உறவுகளுக்கு நன்கு பரீட்சயமானது. பிரபலமானது. அவர்கள் வாழ்நாளில் ஒரு தடவையாவது அங்கு செல்ல வேண்டும் என்ற விருப்பத்தைக் கொண்டிருப்பவர்கள். யாழ்ப்பாணத்திலிருந்து இந்தத் திருத்தலங்களுக்கு இலகுவாகச் செல்ல முடியும் என்பதால், இது தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள ஹொட்டல் உரிமையாளர்கள் சிலர் சென்னையிலுள்ள பிரயாண முகவர்களுடன் ஆலோசனைகளை நடத்தியிருப்பதாகவும் அறியக் கூடியதாகவுள்ளது.

சென்னையிலுள்ள பிரபல பிரயாண முகவர் நிலையமான மதுரா ட்ரவல்ஸ் போன்றன இவ்விடயத்தில் அக்கறை காட்டி செயற்படத் தொடங்கிருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்னை சென்று யாழ்ப்பாணம் திரும்புவதற்கான பயணக் கட்டணமாக சுமார் 60 ஆயிரம் (இலங்கை) ரூபா அறவிடப்படுவதாக யாழ். நகரிலுள்ள பிரபல பிரயாண முகவர் அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டது. அதனை விட பயணி ஒருவர் 20 கிலோ எடையுள்ள பொதியையும், ஐந்து கிலோ கைப்பையை மட்டுமே கொண்டு செல்ல முடியும். யாழ் - சென்னை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது சிறிய ரக விமானமாக இருப்பதால் பொதிகளைக் கொண்டு செல்வதில் இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கின்றது. இது குருவிகளையும் பெருமளவுக்குக் கட்டுப்படுத்துவதாக இருக்கும்.

### இணைப்பு பஸ் சேவை

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் மீளவும் சேவைகளை ஆரம்பித்துள்ள நிலையில் யாழ். நகரிலிருந்து பலாலி விமான நிலையத்துக்கு பஸ் போக்குவரத்து சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இ.போ.ச. இந்த சேவையை பயணிகளின் நலன் கருதி ஆரம்பிக்கின்றது.

திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய தினங்களில் சென்னை விமான நிலையத்திலிருந்து புறப்படும் விமானம், முற்பகல் 10.50 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடையும். பின்னர் பலாலி விமான நிலையத்திலிருந்து, 11.50 மணிக்கு சென்னை நோக்கிப் புறப்படும்.

இந்த விமான சேவை பயணிகளுக்காகவே இந்த சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ். நகர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய தினங்களில் காலை 8.00 மணிக்கு பலாலி விமான நிலையம் நோக்கி பேருந்து சேவை இடம்பெறும். அதே போன்று நண்பகல் 12 மணிக்கு பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகர் நோக்கி பேருந்து சேவை இடம்பெறும். தேவை ஏற்படின் ரயில் நிலையம் வரையிலும் சேவை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பயணிக்கும் பயணிகளுக்கான ஒரு வழிக் கட்டணமாக 500 ரூபா அறவிடப்படும். மேலும் பயணப் பொதி ஒன்றுக்கு 200 ரூபா அறவிடப்படும். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு யாழ்.மாவட்ட பேருந்து நிலைய பொறுப்பதிகாரியை 076 5378432 என்ற எண்களில் தொடர்புகொள்ள முடியும் என வட மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (22ம் பக்கம் பார்க்க)


## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தவராசா திருவானந்தநாயகி

மண்டைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சாரதா என்று அழைக்கப்படும் திருமதி தவராசா திருவானந்தநாயகி அவர்களது 4வது ஆண்டு நினைவு நாள் 14 டிசம்பர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தவராசா திருவானந்தநாயகி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 29வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வல்லிபுரம் சதானந்தசிவம்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு வல்லிபுரம் சதானந்தசிவம் அவர்களது 29வது ஆண்டு நினைவு தினம் 19 டிசம்பர் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, செஞ்சோலை, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு வல்லிபுரம் சதானந்தசிவம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது உறவுகளுடன் இணைந்து இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

10 டிசம்பர் 2022 முதல் 16 டிசம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளு கின்றோம்.

## மேலதிக விபரங்களுக்கு:-

## ஈழநாடு பரமேஸ் 416 841 9600


## 88வது பிறந்த நன்நாள் நினைவாக



### திருமதி பரமேஸ்வரி சிவனடியான்

அனலைதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது 88வது பிறந்த நன்நாள் 21 டிசம்பர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்த நாள் நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு எலியாஸ் செபஸ்தியான்பிள்ளை

நாரந்தனை ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திரு எலியாஸ் செபஸ்தியான் பிள்ளை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 18 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அவரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திரு எலியாஸ் செபஸ்தியான்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகநாதன் பொன்னுத்துரை

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 20 டிசம்பர் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நல்லதம்பி இரத்தினசபாபதி

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி இரத்தினசபாபதி அவர்களது 11வது ஆண்டு நினைவு தினம் 19 டிசம்பர் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்புப் உணவு வழங்கவுள்ளார்கள். திரு நல்லதம்பி இரத்தினசபாபதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை புஸ்பபாலன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை புஸ்பபாலன் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 12 டிசம்பர் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்துரை புஸ்பபாலன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம்

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.இந்துமகளிர் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 17 டிசம்பர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சபாபதிப்பிள்ளை சுந்தரம்பிள்ளை

புலோலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சபாபதிப்பிள்ளை சுந்தரம்பிள்ளை அவர்களது 23வது ஆண்டு நினைவு நாள் 17 டிசம்பர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சபாபதிப்பிள்ளை சுந்தரம்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



09 டிசம்பர் 2022 வெள்ளிக்கிழமை திருமதி செந்தூரி கிளின்ஸ் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி செந்தூரி கிளின்ஸ் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



10 டிசம்பர் 2022 சனிக்கிழமை கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 டிசம்பர் 2022 சனிக்கிழமை புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தருமதர்சினி கிருபாகரன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 டிசம்பர் 2022 சனிக்கிழமை யாழ்.நல்லூரைச் சேர்ந்தவர்களான திரு இராமலிங்கம் நடுவில் அவர்களது 41வது ஆண்டு நினைவாகவும் திருமதி புவனேஸ்வரி நடுவில் அவர்களது 31வது ஆண்டு நினைவாகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



10 டிசம்பர் 2022 சனிக்கிழமை யாழ்.கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் குளிர்பானங்களும் வழங்கினார்கள்



10 டிசம்பர் 2022 சனிக்கிழமை யாழ்.கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் குளிர்பானங்களும் வழங்கினார்கள்



11 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வி டாக்டர் ஜெயபாரதி கணேசபிள்ளை அவர்களது 15வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



11 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை அனலைதீவு 4ம் வட்டாரம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி கந்தையா செல்லம்மா அவர்களது 21வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் வழங்கினார்கள்





11 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் *Ailgolriz - Mathuvanthy* இணையர்கள் திருமண வாழ்வில் இணையும் நன்நாளாகும். அன்றைய தினம் இணையர்களும் உறவுகளும் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



11 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் *Ailgolriz - Mathuvanthy* இணையர்கள் திருமண வாழ்வில் இணையும் நன்நாளாகும். அன்றைய தினம் இணையர்களும் உறவுகளும் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




12 டிசம்பர் 2022 திங்கட்கிழமை மிஸிசாகா கனடாவில் வசிக்கும் திரு திருமதி இராஜசிங்கம் குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகனுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




12 டிசம்பர் 2022 திங்கட்கிழமை வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை புஸ்பபாலன் அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் வழங்கினார்கள்



12 டிசம்பர் 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் வாசுகி மாணிக்கவாசகர் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் வாசுகி மாணிக்கவாசகர் அவர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



13 டிசம்பர் 2022 செவ்வாய்க்கிழமை தெல்லிப்பளை கட்டுவன் வடக்கைச் சேர்ந்த திரு வல்லிபுரம் கந்தசாமி அவர்களது 33வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் வழங்கினார்கள்



14 டிசம்பர் 2022 புதன்கிழமை பேரலை பளையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் வழங்கினார்கள்

# அரங்கேற்றமல்ல இது கச்சேரி

## வைரமுத்து சொர்ணலிங்கம்

### - இசைக்கேது எல்லை -

எங்களுக்குள் இருந்த இசையின் பெரியதோர் ஆளுமை வர்ணராமேஸ்வரன். இசையின் நுணுக்கங்கள் நன்கறிந்தது மட்டுமல்ல, நல்ல குரல் வளமும் கொண்டவர். உச்ச ஸ்தாயியில் அனாசயமாக பாட வல்லவர். அதனால் தான் அவர் தேசிய பாடகன் ஆனார்.

அவர் தனக்கு தெரிந்த வித்தைகளை உலகெங்கும் வாழும் மாணவர்களுக்கு புகட்டிக் கொண்டிருந்தார். அப்போது சொல்லுவார் அங்கிள் எங்கடை இளைய தலைமுறையுக்குள்ளை இனியில்லையெண்ட திறமைகள் இருக்குது . கொஞ்ச நாளிலை பாப்பியள் என்று சொல்லிக் கொண்டிருந்தவரை திடீரென கோவிட் கொண்டு சென்றுவிட்டது.





அவர் மறைந்து ஒரு வருடம் ஓடியபின் வர்ணாவின் மாணவரின் அரங்கேற்றம் என பார்த்தவுடன் எப்படி நடக்கிறது என எனக்குள் யோசித்தேன். ஜெயதேவன் மாஸ்ரர் என்னை கூப்பிட்டு அரங்கேற்றத்துக்கு கட்டாயம் வாங்கோ. நான் தான் அந்த பிள்ளை மாதங்கியை அரங்கேற்றத்துக்கு தயார் பண்ணினனான் என்றார்.

என்ன 4.30 க்கு தொடங்கும் எண்டு போட்டிருக்கே. தொடங்கியிடுமா என்று கேட்டேன். அவர் 5.00 மணிக்கு வாங்கோ என்றார். சரியாக 5.00 மணிக்கு மண்டபத்தை அடைந்தேன். அப்போது தான் பூசை ஆரம்பிக்கிறார்கள். 6.00 மணிக்கு கலைஞர்கள் மேடையில் அமர்ந்தார்கள். இரண்டு பெரிய ஜாம்பவான்கள் மிருதங்கமும் கடமும் இடையிலே வீணையோடு ஒரு ஓர் மெல்லிய உருவம். உமையாள்புரம், காரைகுடி, திருவாரூர் என இப்படித் தான் இசை மேதைகளை அடைமொழி போட்டு கூப்பிடுவார்கள். அப்படித் தான் மிருதங்கமும். ரொறன்ரோ கௌரிசங்கர் என்று தான் இந்தியவின் மேடைகளில் அழைப்பார்கள். மற்றவர் இந்தியாவின் இசை மேதைகளுக்கெல்லாம் பக்கவாத்தியம் வாசிக்கும் ரவி பாலசுப்பிரமணியம். எனக்கு மேடையை பார்த்தவுடன் மனதுக்குள் ஓர் இனம் புரியாத உணர்வு. இரண்டு பக்கம் வித்துவான்கள். இடையில் வீணையோடு நலிந்த யுவதி. இரண்டு யானைகளுக்கு மத்தியில் மாட்டுப்பட்ட ஓர் சிறுமி போல் தென்பட்டாள். யானையின் கால்களுக்குள் இவள் நசுங்கி மாளப் போகிறாளே என எண்ணினேன்.

இசை வசந்தா வர்ணத்துடன் ஆரம்பித்தது. கொஞ்ச நேரம் போனதும் புரிந்து விட்டது நான் தப்புக்கணக்கு போட்டு விட்டேன் என்று. அவள் இரண்டு யானைகளுக்குள் அகப்பட்ட சிறுமியல்ல. யானைகளை ஓட்டும் பாகன் என்று. எதைப் பற்றியும் கவலைப்படாமல் பக்க வாத்தியங்களை பின்னாலே வாருங்கள் என சொல்லி இசைக்குள் ஆழ்ந்து விட்டாள். அது என்னைப் பொறுத்தவரை அரங்கேற்றமல்ல. முழுமையான கச்சேரி. ஏனென்றால் அரங்கேற்றத்தில் மாணவன் தீர்மானங்களுக்காக மிருதங்கத்தையோ அன்றி குருவையோ பார்ப்பான். சொல்லிக் கொடுத்ததை அப்படியே ஒப்பிப்பான். இங்கே அப்படி நடக்கவில்லை. கற்பனா ஸ்வரம் வாசிக்கும் போதும் குறைப்புக்களின் போதும் தாளம் வீணை என்ன வாசிக்க போகிறாள் என்பதை பார்த்து வாசிக்க வேண்டிய தடுமாற்றத்தை பார்த்தேன்.

அதிலும் எனக்கு பிடித்த சாருகேசி ராகத்தில் ராகம் தானம் பல்லவி செய்தபோது இசையின் இன்பத்தை அள்ளி பருகினேன். இவள் சாதாரண மாணவியல்ல. பிறவியிலேயே ஞானமுள்ளவள். இவளை எமது இனம் ஆதரித்தால் இமயம் கூட போகக் கூடியவள். இவளைப் போல் பல சிறார்கள் இசையில் ஞானம் படைத்தவர்கள் எம்மிடையே இருக்கிறார்கள். என்ன பிரயோசனம்.

ஏதோ ஓர் வேலைக்கு போடு வந்து ஆகக் கூடியது நாலு மாணவர்களுக்கு இசையை சொல்லி கொடுக்கத்தான் முடியும். இவளால் கிழமைக்கு ஒன்று வேண்டாம் மாதத்துக்கு ஒரு கச்சேரியாவது பண்ண முடியுமா? நல்ல உருக்கில் செய்தாலென்ன. தீட்ட தீட்டத் தானே கத்தி கூராகும்

திறமை ஒரு சாராருக்கு மட்டும் சொந்தமானதல்ல என எம் இனம் நம்புமா? நாங்கள் கைபிடித்து தூக்கிவிடாமல் எமது குழந்தை நடந்து ஓடி சாதனை படைக்க முடியாது என எம் இனம் யோசிக்குமா?
















# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### காலம் 16-11-2022 புதன்கிழமை முதல் 21-01-2023 சனிக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபறோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 15-11-2022 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 16-11-2022 புதன்கிழமை -அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
25-11-2022 வெள்ளிக்கிழமை, 26.11.2022 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 27-11-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
02.12.2022 வெள்ளிக்கிழமை, 03.12.2022 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 11-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை மதியம்

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.


**ஆஞ்சநேயர் ஜெயந்தி**
23.12.2022 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை யாகம், அபிஷேகம், பூஜை நடைபெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல்,**
**படி ஏறி அபிஷேகம் செய்தல்ச பேட்டை துள்ளுதல்**
25-12-2022 ஞாயிற்றுக்கிழமை, 26.12.2022 திங்கட்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 4:00 மணி முதல் மாலை 3:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2022 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 31.12.2022 சனிக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் இடம் பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**
01-01-2023 ஞாயிற்றுக்கிழமை முதல் 14-01-2023 சனிக்கிழமை வரை.

**மகர சங்கிராந்தி, திருவாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
14-01-2023 சனிக்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2023 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



14 டிசம்பர் 2022 புதன்கிழமை மண்டைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்டிருந்த சாரதா என்று அழைக்கப்படும் திருமதி தவராசா திருவானந்தநாயகி அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் வழங்கினார்கள்



15 டிசம்பர் 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி தியாரா ரகுமாறன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்.



16 டிசம்பர் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு புவிபாலன் பாலகிருஷ்ணன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு புவிபாலன் பாலகிருஷ்ணன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



09 டிசம்பர் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் சிவஸ்ரீ சிவா குருக்கள் சகானா இணையரது இரண்டாவது திருமணப்பதிவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்

**ஏழைக் குழந்தைகளுக்கு உணவளிப்பவன் ஆண்டவனுக்கு அருகில் இருப்பான் என்பது வேத வாக்கு!**





# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# ரணில் வகுக்கும் வியூகத்தில் விழாமல் இருப்பது எப்படி?

ரணில் விக்கிரமசிங்க ஒரு தந்திரசாலி என்பது தமிழ் மக்களின் மனதில் ஆழப் பதிந்த ஒரு படிமம். எனவே அவர் தந்திரசாலி என்று தெரிந்து கொண்டும் அவருடைய பொறியில் போய் விழுவது என்பது சுத்த முட்டாள்தனம். ஒரு தந்திரசாலியை எதிர் கொள்வதற்கு தமிழ்த் தரப்பும் தந்திரமாக யோசிக்க வேண்டும். ரணிலை எதிர் கொள்வதற்கு தமிழ் தரப்பு தயாராக வேண்டும்.

கஜேந்திரக்குமார் கூறுகிறார், ரணில் கூட்டாட்சிக் கட்டமைப்பை உருவாக்கத் தயார் என்று அறிவித்தால் தாங்களும் பேசத் தயார் என்று. ரணில் அதைச் செய்ய மாட்டார். அதை செய்து விட்டு அவர் ஜனாதிபதியாக இருக்க முடியாது. எனவே பேச்சுவார்த்தைகளை அவர் அங்கிருந்து தொடங்கப் போவதில்லை. அந்த நிபந்தனையை கைவிடாத வரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேச்சு வார்த்தைகளில் ஈடுபட முடியாது.

விக்னேஸ்வரன் கூறுகிறார் உயர்ந்த பட்ச கூட்டாட்சி அதாவது கொன் பெடரேஷன் என்று. ரணில் அதைத் தர மாட்டார். அது தான் விக்னேஸ்வரனின் மாறாத நிலைப்பாடு என்றால், அக்கட்சி ஒரு கட்டத்துக்கு மேல் பேச்சுவார்த்தையில் ஈடுபட முடியாது.

அடுத்தது கூட்டமைப்பு கூட்டமைப்பும் சமஷ்ரி என்று தான் கூறுகிறது. ஆனால் ஏற்கனவே 2015 இலிருந்து 2018 வரையிலும் லேபல் இல்லாத ஒரு சமஸ்ரி,அல்லது ஒற்றையாட்சிக்குள் சமஸ்ரி என்று கூறிக் கொண்டு யாப்புருவாக்க முயற்சியில் ஈடுபட்டது. அதன் விளைவாக அடுத்து வந்த தேர்தலில் அக்கட்சி தமிழ்மக்கள் மத்தியில் தனக்கிருந்த ஏகபோகத்தை இழந்தது.தனது ஆசனங்களில் ஆறை இழந்தது.எனவே கூட்டமைப்பு அதே தவறை மறுபடியும் விடுமா என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

அதே சமயம், சிங்களத் தரப்பு எதைத் தரும்? ரணில் விக்ரமசிங்க இதுவரையிலும் சமஷ்ரிக்குத் தயார் என்று கூறவில்லை. சஜித் தெளிவாகக் கூறுகிறார் 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவது என்று .மஹிந்த ராஜபக்ச தெளிவாகக் கூறுகிறார் 13 பிளஸ் என்று.

சிங்களமக்கள் மத்தியில் உள்ள பிரதான கட்சிகள் அனைத்தும் 13ஐச் சுற்றியே சிந்திக்கின்றன. அதாவது ஒற்றையாட்சிக் கட்டமைப்பை மாற்றியமைக்க அவர்கள் இப்பொழுதும் தயாரில்லை. மேலும் 13ஐ வலியுறுத்துவதன் மூலம் இந்தியாவையும் அவர்கள் வெற்றி கரமாகக் கையாளலாம் என்று நம்புகிறார்கள்.தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையே பிளவை அதிகப்படுத்தலாம் என்று அவர்கள் சிந்திக்க முடியும்.

எனவே வரும் 13ஆம் தேதி பேச்சுவார்த்தை மேசைக்கு வரப் போகும் தரப்புகள் எதைக் கேட்கின்றன அல்லது எதைத் தரக்கூடும் என்பவற்றின் அடிப்படையில் தொகுத்துப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரிகிறது.

இப்பேச்சுவார்த்தைகள் ஒரு கட்டத்துக்கு மேல் வளர முடியாது. அப்படி வளர்வதாக இருந்தால் இரண்டு தரப்பும் விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். இதில் சிங்களத் தரப்பு ஒற்றையாட்சியை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். தமிழ்த் தரப்பு முழுச் சமஸ்ரி என்ற கோரிக்கையில் இருந்து இறங்கிவர வேண்டி இருக்கும்.

அதாவது பொழிவாகச் சொன்னால் 13-க்கும் சமஸ்டிக்கும் இடையில் இணைக்கப் புள்ளியொன்றைக் கண்டு பிடிக்க வேண்டியிருக்கும்.

ஆனால் இதிலோர் அடிப்படையான கோட்பாட்டுப் பிரச்சினையும் நடைமுறைப் பிரச்சினையும் உண்டு.



அதாவது,ஒற்றையாட்சியும் சமஷ்டியும் ஒன்றாக இருக்க முடியாது. அப்படியிருந்தால் அது சமஷ்ரி அல்ல. ஒற்றையாட்சி தான். மேலும் இலங்கைத்தீவின் யாப்பு மரபு எனப்படுவது தமிழ் மக்களுக்கு எதிரானது. எனவே யாப்பில் தெளிவாக்க கூறப்படாதவற்றை அவர்கள் எப்படி வியாக்கியானம் செய்வார்கள் என்ற அனுபவம் தமிழ் மக்களுக்கு உண்டு. இந்த அடிப்படையில் சிந்தித்தால் ரணில் தொடங்கப் போகும் பேச்சுவார்த்தைகள் எங்கேயோ ஒரு கட்டத்தில் தேங்கி நிற்கும் வாய்ப்புக்களே அதிகம்.

அதாவது பொழிவாகச் சொன்னால் கஜேந்திரகுமாரின் நிபந்தனையை ஏற்றுக் கொண்டால் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவே முடியாது. அதேசமயம் விக்னேஸ்வரன் மற்றும் கூட்டமைப்பின் முன்மொழிவுகளை ஏற்றுக் கொண்டால் பேச்சுவார்த்தைகள் ஒரு கட்டத்துக்கு மேல் முறிந்து போகும். மொத்தத்தில் பேச்சுவார்த்தைகள் முறிந்து போகும் ஆபத்தே அதிகம்.

ஆனால் அதற்காக தமிழ்த் தரப்பு பேசாமல் இருக்க முடியாது. பன்னாட்டு நாணய நிதியத்தை கவர்வதற்கும், மேற்கு நாடுகளைக் கவர்வதற்கும் ரணில் ஒரு நாடக மேடையைத் திறக்கப் போகிறார்.அதில் பங்காளிகளாக மாறி தமிழ் பிரதிநிதிகளும் தமது மக்களுக்கு நடிக்க போகிறார்களா? அல்லது அந்த நாடக மேடையை உலக சமூகத்துக்கு அம்பலப்படுத்துவதா? என்ற முடிவை இப்பொழுது தமிழ்த் தரப்பு எடுக்க வேண்டும்.

பேச்சுவார்த்தைகளை நிராகரிப்பதை விடவும், பேச்சுவார்த்தைகளை அம்பலப்படுத்துவதே தமிழ்த் தரப்பின் பேரபலத்தை அதிகப்படுத்தும். ஏனெனில், பேச்சுவார்த்தைகளை நிராகரிக்கும் பொழுது அதை உலக சமூகம் பொதுவாக வரவேற்பதில்லை. ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் விடுதலைப்புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளை நிராகரித்தது உண்டு. தேர்தல்களை புறக்கணித்ததும் உண்டு. அதற்கு ஒரு தர்க்கம் உண்டு.

அந்த இயக்கத்தின் பிரதான ஒழுக்கம் ஆயத்தப் போராட்டந்தான். அந்த இயக்கம் ஒரு நிலத்தை கட்டுப்படுத்தியது. ஒரு கருநிலை அரசை வைத்திருந்தது. தேர்தல் அல்லது பேச்சுவார்த்தை எனப்படுவது அவர்களை பொறுத்தவரை பிரதான ஒழுக்கமில்லை.

ஆனால் தமிழ்க்கட்சிகளின் பிரதான ஒழுக்கமே தேர்தல் தான்.இங்கு மக்கள் இயக்கம் கிடையாது. இருப்பவையெல்லாம் தேர்தல் கேட்கும் கட்சிகளே. தேர்தல் தான் அவர்களுடைய பிரதான ஒழுக்கம். இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெறுவதற்கு பேச்சுவார்த்தைகளைத் தவிர வேறு எந்த வழியையும் அவர்கள் கடந்த 13 ஆண்டுகளாக உருவாக்கியிருக்கவில்லை. தேர்தல் மைய அரசியலிலும் தமிழ் மக்கள் ஒரு தேசத்திரட்சியாக இல்லை. வடக்கு கிழக்கு இணைப்பை அரசாங்கத்தோடு நின்று எதிர்க்கக்கூடிய கிழக்கு மையத் தமிழ் அரசியல்வாதிகள் இருவர் இப்பொழுது நாடாளுமன்றத்தில் உண்டு. எனவே வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் என்ற கோட்பாடு சோதனைக்கு உள்ளாகும் ஒரு காலகட்டம் இது. மேலும் கடந்த 13 ஆண்டுகளாக தமிழ்மக்கள் தங்களுடைய போராட்டம் நீதிக்கானது என்று கூறி வருகிறார்கள்.ஆனால் நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்களின் பலங்களில் ஒன்றாக காணப்படும் தமிழ் டயாஸ்போறா ஒரு பலமான திரட்சியாக இல்லை. அதோடு மேற்கு நாடுகளும் தமிழ் மக்களுக்கு இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியை பெற்றுத்தரும் வாய்ப்புகள் இதுவரையிலும் கனியவில்லை.

மேற்கு நாடுகள் மட்டுமல்ல, ஐநா போன்ற உலகப் பொது மன்றங்கள் மட்டுமல்ல,எந்த ஒரு வெளித்தரப்பும் தமிழ்மக்களுக்கு நீதியைப் பெற்று தர மாட்டார்கள். தமிழ் மக்கள் தான் தங்களுக்கு வேண்டிய நீதிக்காக போராட வேண்டும்.ஆனால் கடந்த 13 ஆண்டுகளில் நிலைமை எவ்வாறு உள்ளது? ஐநா தமிழ் மக்களுக்கு பரிகார நீதியைப் பரிந்துரைக்கத் தயாரில்லை.மாறாக நிலைமாறுகால நீதியைத்தான் பரிந்துரைத்தது.அது வென்றவர்கள் தோற்றவர்களுக்கு வழங்கும் ஒரு நீதி.இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னிருந்து நூரம்பேர்க் தீர்ப்பாயத்தில் தொடங்கி அண்மைக்கால கம்பூச்சியத் தீர்ப்பாயங்கள் வரையிலும் நிலைமாறுகால நீதி எனப்படுவது வென்றவர்கள் தோற்றவர்களுக்கு வழங்கும் ஒரு நீதிதான்.

எனவே தொகுத்துப் பார்த்தால்,கடந்த 13ஆண்டுகளாக நீதிக்கான போராட்டத்தில் அனைத்துலக சமூகம் தமிழ்





கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -


மக்களுக்கு விசுவாசமாக நடந்ததா அல்லது தமிழ் மக்களை ஒரு கருவியாகக் கையாண்டதா? என்ற சந்தேகமும் உண்டு. இதில், அனைத்துலக சமூகத்தில் தங்களுக்குள்ள வரையறைகளை தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். மேலும், பிராந்தியப் பேரரசாகிய இந்தியாவானது, கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தை எப்படிக் கையாளலாம் என்று தான் சிந்திக்கின்றது. தமிழ்மக்களை ஒரு தரப்பாக ஏற்றுக் கொள்ளவில்லை. கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் வைகோவின் கேள்விக்கு இந்திய வெளியுறவு அமைச்சர் வழங்கிய பதிலில் அந்தத் தொனி உண்டு.

தமிழகம் அண்மை ஆண்டுகளில் ஈழத் தமிழர்களுக்காக பெரியளவில் நொதிக்கவில்லை. தமிழ் கட்சிகளும் அதற்காக வேலை செய்யவில்லை. எனவே கூட்டிக் கழித்து பார்த்தால் ஈழத் தமிழர்கள் ஒப்பீட்டளவில் பலவீனமாக காணப்படுகிறார்கள். தமது பலம் எது பலவீனம் எது என்பதை குறித்து ஈழத் தமிழர்களிடம் சரியான மதிப்பீடு இருக்க வேண்டும். கற்பனையில் திளைக்க முடியாது.

கடந்த 13 ஆண்டுகளில் தமிழ்க் கட்சிகள் இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெறுவதற்கு பேச்சுவார்த்தை என்று ஒரே ஒரு வழியைத் தான் நம்பியிருக்கின்றன. பேச்சுவார்த்தைகளை எதிர்க்கும் கட்சிகள் மக்கள் இயக்கத்தை உருவாக்கி, தொடர்ச்சியாகப் போராடி, தியாகம் செய்து, தமது பேரபலத்தை அதிகப்படுத்திக் காட்டட்டும்.

இவ்வாறான பரிதாபகரமான ஓர் அரசியற் சூழலில் பேச்சுவார்த்தைகளை நிராகரிப்பதை விடவும் பேச்சுவார்த்தைகளில் இறங்கி அவற்றை அம்பலப்படுத்துவது தான் அனைத்துலக சமூகத்தின் மத்தியில் தமிழ் மக்களின் அந்தஸ்தை உயர்த்தும். ரணில் ஒரு நாடக மேடையை திறக்கிறார். அதில் சேர்ந்து நடிப்பதல்ல தமிழ் தரப்பின் வேலை. அதை ஒரு நாடகம் என்று அம்பலப்படுத்த வேண்டும். யுத்தத்தைப் போலவே பேச்சுவார்த்தையும் ஒரு கலை தான். அது ஒரு கூட்டு ஒழுக்கம். யுத்தத்தைப் போலவே பேச்சுவார்த்தைகளுக்கும் வியூகங்கள் உண்டு. எனவே ரணில் வகுக்கும் வியூகத்துக்கு எதிர் வியூகத்தை தமிழ்த் தரப்பும் வகுக்க வேண்டும்.



# இஸ்ரேலின் கடல், நில, முற்றுகையால் பட்டினியை எதிர் நோக்கும் பலஸ்தீனம்:

## காசாவில் வறுமை விகிதம் பெருமளவில் உயர்வு !

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பாலஸ்தீனத்தின் காசாவில் கடந்த வருடத்தில் மட்டும் வறுமை விகிதம் 64 சதவீதமாக உயர்ந்துள்ளதாக பாலஸ்தீனிய சர்வதேச உறவுகளுக்கான கவுன்சில் தெரிவித்துள்ளது.



பாலஸ்தீனத்தில் நீடித்த மோதல்கள், பொருளாதார தேக்கநிலை இன்னமும் தொடர்கிறது. அதேவேளை தடைசெய்யப்பட்ட வர்த்தகம் மற்றும் வளங்களுக்கான அணுகல், அதிக வேலையின்மை மற்றும் வறுமை விகிதங்களுடன் இணைந்து, பட்டினியும் அதிகரித்துள்ளது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து ஆகியவற்றில் நிலையான வளர்ச்சியை அடைவதற்கு கடுமையான சவால்கள் பாலஸ்தீனத்தில் தொடர்கிறது.

கடந்த 16 ஆண்டுகளாக இஸ்ரேலின் கடலோரப் பகுதியில் விதிக்கப்பட்ட முற்றுகையாலும், இந்த பகுதியில் வறுமை விகிதம் 64 சதவீதமாக உயர்ந்துள்ளதாக பாலஸ்தீனிய சர்வதேச உறவுகளுக்கான கவுன்சில் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கோவிட் - 19 தொற்று வெடிப்பதற்கு முன்பாக கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு மக்கள் - 32.7 சதவீதம் அல்லது 1.6 மில்லியன் மக்கள் - சத்தான உணவை பெற முடியவில்லை. அத்துடன் உணவுப் பற்றாக்குறை பெண்களிடையே அதிகமாக உள்ளது. 33.7 சதவிகிதம் பெண்களை வழிநடத்தும் குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறையாலும், பாதுகாப்பற்ற நிலையாலும் குறிப்பாக காசா பகுதியில் இது 64 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

பாலஸ்தீனிய சர்வதேச கவுன்சில் தகவலின்படி 2007-ம் ஆண்டு ஹமாஸ் அரசு கடலோரப் பகுதியின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றியதை தொடர்ந்து, 2 மில்லியனுக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் வசிக்கும் காசா பகுதி இஸ்ரேலிய முற்றுகையின் கீழ் உள்ளது. ஹமாஸ் ஆளுகைக்கு உள்பட்ட கடலோரப் பகுதியானது 360 சதுர கி.மீ நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.

### தொடரும் யுத்த விளைவு

மேலும் இது உலகின் மிகவும் அதிக மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இங்கு வசிக்கும் 80 சதவீத மக்கள் மனிதாபிமான உதவி மற்றும் சர்வதேச அமைப்புகளின் மானியங்களை நம்பியுள்ளனர். காசா பகுதியில் 16 ஆண்டுகளாக இஸ்ரேல் விதித்துள்ள முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவர அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்று கவுன்சிலின் தலைவர் கூறினார்.

தொடரும் யுத்தத்தால் கடுமையான உணவுப் பாதுகாப்பற்று பாலஸ்தீனியர்கள் கணிசமான நுகர்வு இடைவெளியை அனுபவித்து வருகின்றனர். உணவு, வீடு மற்றும் உடை உள்ளிட்ட அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழியின்றி உள்ளனர்.

காசாவில் உள்ள மனிதாபிமான நிலைமைகள் - வறுமை மற்றும் உணவுப் பற்றாக்குறை ஆகியவை முறையே 53 சதவிகிதம் முதல் 64.4 சதவிகித மக்கள் தொகையைப் பாதிக்கின்றன என தரவுகள் தெரிவிக்கின்றன.

இது ஆபத்தான மேலும் அனைத்து உற்பத்தித் துறைகள், அடிப்படை சமூக சேவைகள் மற்றும் உள்கட்டமைப்புகளின் சரிவைப் பின்பற்றுகிறது.

16 ஆண்டுகால இஸ்ரேலின் கடல், நிலம் மற்றும் வான்வழி முற்றுகையின் ஒட்டுமொத்த தாக்கத்தால் காசாவின் சமூகப் பொருளாதாரத் தளம் தள்ளாடுகிறது. கோவிட் 19 உடன் பாதிப்புகள் மேலும் அதிகரித்துள்ளன.



உலக உணவுத் திட்டம்:

உலக உணவுத் திட்டம் (றுகுீ) 1991 முதல் பாலஸ்தீனத்தில் உள்ளது, இது மிகவும் பாதிக்கப்படக்கூடிய அகதிகள், பொது மக்களுக்கு உணவு உதவி மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குகிறது. அத்துடன் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் உட்பட வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கான அரசாங்க முயற்சிகளை உலக உணவுத் திட்டம் வழங்குகிறது.

உலக உணவுத் திட்டம் ஆனது காசா பகுதி மற்றும் மேற்குக் கரையின் தெற்குப் பகுதிகள் உட்பட, உணவுப் பற்றாக்குறை அதிகம் உள்ள பகுதிகளில் கவனம் செலுத்துகிறது. சமீபத்திய அதிகரித்த கோவிட்-19 இன் தற்போதைய விளைவு காரணமாக உலக உணவுத் திட்டம் மேற்குக் கரையின் முழுப் பகுதிகளுக்கும் தனது உதவியை விரிவுபடுத்தியுள்ளது.



எத்தகைய சர்வதேச அழுத்தம் இருப்பினும், இஸ்ரேலால் கைப்பற்றபட்ட பாலஸ்தீனம் இன்றுவரை தொடரும் சியோனிச ஆதிக்கத்தை எந்த ஒரு நாடும் தட்டிக் கேட்கவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

### அமெரிக்காவின் கைப்பிள்ளை:

இஸ்ரேல் அரசுக்கு 1949-1996 ஆம் ஆண்டு வரை அமெரிக்கா வழங்கிய உதவித்தொகை 62.5 பில்லியன் ஆகும். அதாவது ஒரு இஸ்ரேலிய யூத பிரஜைக்கு செலவழித்த தொகை 10775 டொலர்கள்.

அதே நேரத்தில் ஆப்ரிக்க மற்றும் தென் அமெரிக்கா மக்களுக்கு செலவிட்ட தொகை தனி நபருக்கு வெறும் 59 டொலர் மட்டுமே. இது போக ஒவ்வொரு வருடமும் வறுமையில் வாடும் தேசங்களுக்கு அமெரிக்கா வழங்கும் உதவித்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு தொகை இஸ்ரேலிற்கு அமேரிக்கா வழங்குகிறது.

இது ஒன்றும் அவர்களின் வயிற்றுப் பசியை போக்குவதற்கு இல்லை. மாறாக ஆயுதங்களை குவிக்கவும் பூர்வீக பலஸ்தீன மக்களை அடக்கவே பயன்படுகிறது என்பதை மறுக்க முடியாது.

பாலஸ்தீனின் நிலங்களை ஆக்கிரமித்து பாலஸ்தீனின் பூர்வீக குடிமக்களை தினம் தினம் கொன்றும் அவர்களை அகதிகள் முகாமிற்கு அனுப்பியும் வருகிறது. இஸ்ரேல் ஒன்றும் தனது சொந்த பணத்தில் இது போன்ற இனப்படுகொலைகளை அரங்கேற்றி வரவில்லை.

மாறாக அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பணத்தில் தான் இவ்வளவு கொடுமைகளையும் செய்து வருகிறது. இதிலிருந்தே ஐரோப்பிய மற்றும் அமெரிக்காவின் மனித உரிமைகள் மற்றும் சமாதான, ஜனநாயகம் எல்லாம் வெறும் எழுத்தளவில் தான் என்பது புரிகிறது.

நெல்சன் மண்டேலாவின் தீர்க்கதரிசனம்:

பாலஸ்தீனப் பிரச்சினையை நம் காலத்தின் மாபெரும் தார்மீகப் பிரச்சினை என்றார் நெல்சன் மண்டேலா. பாலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை, அவர்களின் துயரத்தை இதைவிடச் சுருக்கமாக அதே நேரத்தில் மனத்தைத் தைக்கும் விதமாக ஒருவர் கூற முடியாது.

இரண்டாம் உலகப்போருக்கு பின் இரண்டு சம்பவங்கள் உலகை உலுக்கிக் கொண்டிருந் தது. இதில் ஒன்றான தென்னாப்பிரிக்க நிறவெறி ஆட்சி நீண்ட நெடிய போராட் டத்திற்குப் பின்னர் 1994இல் முடிவுக்குவந்தது.

ஆனால் 1940களில் தொடங்கிய பாலஸ்தீன மக்களின் துயரம் இன்றளவும் தொடர்கிறது. பலஸ்தீன சுதந்திர போராட்டமும் இன்றுவரை தொடர்ந்து கொண்டுதான் உள்ளது என பாலஸ்தீனம் பற்றிய நெல்சன் மண்டேலாவின் கருத்தை எவராலும் மறுக்க முடியாது.





# தீர்வுக்கான வாய்ப்புக்கள் அதிஷ்டம் நிறைந்தவை:- தவற விடப்பட முடியாதவை!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினுடைய அறிவிப்பின்படி அடுத்த சில நாட்களில் (12.12.2022) இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான (ஜனாதிபதியில் அறிவிப்பின்படி அதிகாரப் பரவலாக்கத்துக்கான) பேச்சுகள் ஆரம்பமாக வேண்டும். கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் அவர் அதற்குத் தயார். இதை அவர் ஏற்கனவே பாராளுமன்றத்திலும் ஓரளவுக்கு வெளிப்படுத்தியிருந்தார் வெளிப்படையாகப் பேசியிருந்தார். தான் மட்டுமல்ல, ஏறக்குறைய அனைவரும் இதற்குச் சம்மதம்தானே என்பதையும் நேரில் கேட்டிருந்தார். ஜே.வி.பி மட்டும் சறுக்கியது. மற்றத் தரப்புகள் விரும்பியோ விரும்பாமலோ தலையாட்டின.

தமிழ்த் தரப்புகளில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தவிர, ஏனையவை பேச்சுகளுக்கு தயார் என்ற நிலையில் உள்ளன. அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற ஈ.பி.டி.பி. தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் உட்பட.

அப்படியென்றால் பேச்சுகள் குறித்த நாளில் ஆரம்பமாகுமா?

இதற்கு இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் வரையில் தெளிவான பதில் கிடைக்கவில்லை. பேச்சுகள் ஆரம்பிக்கப்படுவதாக இருந்தால் அதற்கான நிகழ்ச்சி நிரல் வேண்டும். அது இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதாக இருந்தால், நடக்கவுள்ள பேச்சுகள் எங்கே, எப்பொழுது ஆரம்பமாகும்? எந்த அடிப்படையில் பேச்சுகள் நடக்கும்? அதன் கால அட்டவணை என்ன? அதில் யார் யாரெல்லாம் பங்கேற்பர்? அதாவது தமிழ்த்தரப்பிலிருந்து யார் யார் பங்கேற்பர்? அரசாங்கத் தரப்பிலிருந்து யார் யாரெல்லாம் பங்கேற்பர்? என்ற விடயங்கள் முடிவு செய்யப்பட வேண்டும்.

அது மட்டுமல்ல, முஸ்லிம் தரப்பும் இந்தப் பேச்சுகளில் பங்கேற்குமா? என்பதைப் பற்றியும் எந்தத் தகவலும் இல்லை. இதேவேளை தங்களுடனும் பேச்சுகள் நடத்தப்பட வேண்டும் என மலையகக் கட்சிகளும் கேட்டுள்ளன. இதைப் பற்றியும் எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை.




அப்படி எல்லாத் தரப்புகளின் கோரிக்கைகளையும் ஏற்று பேச்சுகள் நடத்தப்படுமா? என்பது ஒரு கேள்வி. இன்னொரு கேள்வி, அப்படியில்லை என்றால், தனித்தனியாகப் பேச்சுகள் நடக்குமா? எப்படியென்றாலும் வடக்குக் கிழக்குப் பிரச்சினை பற்றிப் பேசும்போது சமனிலையில் முஸ்லிம்களும் தமிழர்களும் பங்கேற்க வேண்டுமல்லவா!

இதையெல்லாம் அடுத்து வரும் ஒரு வாரத்திற்குள் விரைந்து முடிவெடுத்தால் தான் பேச்சுகளை ஆரம்பிக்க முடியும். ஆனால் நடைமுறைகள் மந்தகதியிலேயே உள்ளன.

இருந்தாலும் பேச்சுகளை நடத்த வேண்டும் என்று ஜனாதிபதி விரும்புவதாகத் தெரிகிறது. ஜனாதிபதியின் விருப்பம் எந்தளவுக்கு நிறைவேறும் என்று கேட்போரும் உண்டு. தன்னை இன்னும் பலப்படுத்த முடியாத நிலையில் இருக்கும் அவர், எப்படி இந்தப் பெரிய சுமையைத் தனியே தூக்கப் போகிறார்? என்று தமது கேள்விக்கான நியாயத்தை இவர்கள் முன் வைக்கின்றனர். பலமான நிலையில் இருந்த ஆட்சியாளர்களே தீர்வை முன்வைப்பதற்குத் தயங்கினர். இதைக் கடந்து சிலர் முயற்சித்தாலும் எதிர்க்கட்சிகள் அதைத் தடுத்தன. குறிப்பாக சந்திரிகா குமாரதுங்கவினால் முன்னெடுக்கப்பட்ட பேச்சுகளும் முன் வைக்கப்பட்ட தீர்வும் எதிர்த்தரப்பினரால் நிராகரிக்கப்பட்டன. இந்த எதிர்ப்பில் முக்கிய பாத்திரமேற்றவர் இன்றைய ஜனாதிபதியும் அன்றைய எதிர்க் கட்சித் தலைவருமான இதே ரணில் விக்கிரமசிங்க தான் என்றும் கூறுகிறார்கள்.



இப்பொழுது நிலைமை முற்றிலும் வேறாக உள்ளது. அரசாங்கம் மிகப் பலவீனமான நிலையில் உள்ளது. ஒற்றை மனிதராக ரணில் விக்கிரமசிங்க உள்ளார். இந்த நிலையில் இவரால் எப்படி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்? எனவும் கேட்கின்றனர்.

இதெல்லாம் உண்மைதான். நடந்தவை தான். ஆனால், எப்போதும் ஒரே விதமாக நிலைமை இருப்பதில்லை. அதிலும் அரசியலில் இது முற்றிலும் வேறானது. அது புரிந்து கொள்ளவே கடினமானது. இதனால் தான் அரசியலில் நண்பரும் இல்லை. எதிரியும் இல்லை என்று கூறுவதுண்டு.

ஏன அண்மைக்கால இலங்கை அரசியற் சூழலை எடுத்துப் பாருங்கள். மைத்திரிபால சிறிசேன — ரணில் விக்கிரசிங்க கூட்டு. அதாவது, 2015 இல் வரலாற்றில் எதிரும் புதிருமாக இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றாக இணைந்து ஆட்சியமைத்தன. இதற்காக மகிந்த ராஜபக்ஸவை முழுமையாக எதிர்த்தார் மைத்திரிபால சிறிசேன. அடுத்த சில ஆண்டுகளில் தன்னை எதிர்த்துக் கவிழ்த்த மைத்திரிபால சிறிசேனவுடன் கைகோர்த்து அந்த ஆட்சியிலிருந்த பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவை விரட்டினார் மகிந்த ராஜபக்ஸ. இப்பொழுது அதே மகிந்த ராஜபக்ஸவின் தயவில், ஆதரவில் தான் ஆட்சி நடத்துகிறார், ரணில் விக்கிரமசிங்க.

இது தான் அரசியல். உலகம் முழுக்க, வரலாறு முழுக்க அரசியல் இப்படித்தான் உள்ளது. அதிகாரப் போட்டியும் அதற்கான சூழ்ச்சிகளும் குழிபறிப்புகளும் கூட்டணி சேர்தல்களும் கைகுலுக்கல்களும் கால் வாருதல்களுமாக. விதிவிலக்காக, அபூர்வமாக ஒரு சில தலைவர்கள் இதற்கு மாறான முறையில் ஆட்சியை நடத்தியிருக்கலாம். அரசியலை முன்னெடுத்திருக்கக் கூடும். ஆனால், பெரும்போக்கு முன்சொல்லப்பட்ட வகையில் தான் நடந்து வந்திருக்கிறது. அதிலும் ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களில் இதைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. இந்த இடத்தில் நமக்கு நன்றாகத் தெரிந்த இன்னொரு உதாரணத்தையும் சொல்லலாம்.

தமிழ்நாட்டு அரசியலை எடுத்துப் பாருங்கள். கடந்த இருபது ஆண்டுகளில் தி.மு.க யார், யாருடன் எல்லாம் கூட்டு வைத்தது என்று. அதைப் போல, அ.தி.மு.க. ஒரு தடவை காங்கிரசுடன், மறுதடவை பாரதீய ஜனதாவுடன். இதெல்லாம் கொள்கையின் அடிப்படையில் தான் நடந்தா? நிலைமைகளின் — சூழ்நிலையின் விளைவானவை. அதாவது சூழலை, நிலைமையைத் தமக்குச் சார்பாகக் கையாள்வதற்கான உத்தியாக ஒவ்வொரு தரப்பும் இதைச் செய்துள்ளன. தி.மு.க, அ.தி.மு.க மட்டுமல்ல, வை.கோ, திருமாவளவன் போன்றோரும் அங்குமிங்குமாக தேவைக்கு ஏற்ற மாதிரித் தான் கூட்டுச் சேர்ந்துள்ளனர். 2008 இல் அ.தி.மு.க பாரதீய ஜனதாக் கூட்டணியில் பங்கேற்றிருந்தன வை.கோ. அவை இரண்டையும் எதிர்த்து தி.மு.கவுடன் நிற்கிறார்.

இது தான் அரசியல் யதார்த்தம். இதெல்லாம் சரியென்று இங்கே வாதிடவில்லை. ஆனால் இது தான் நடைமுறையாக உள்ளது. வெளிப்பார்வைக்கு ரணில் விக்கிரமசிங்க தனி நபர் தான். கடந்த தேர்தலில் மக்கள் நிராகரித்த ஒருவர் தான். ஆனால், அவர் தான் இன்று நாட்டின் தலைவர். இது தான் அரசியல் யதார்த்தம்.. இது எப்படி நடந்தது? இதே அரசியலமைப்பின் வழியாக, இதே அரசியற் சூழலில், இதே எதிர்க்கட்சிகளின் பலவீனமான நடத்தைகளின் ஊடாக. இதே மக்கள் சாட்சியத்தின் முன்பாக.

சரியோ பிழையோ இந்தத் தனிநபர் தான் இன்று நாட்டைக் கட்டியாள்கிறார். இன்றுள்ள பொருளாதாரப் பிரச்சினை, அரசியல் பிரச்சினை, இனப்பிரச்சினை எல்லாவற்றுக்கும் தீர்வு காண வேண்டிய நிலையில் உள்ளார். இந்தத் தனிநபருடன் தான் உலகம் பேசுகிறது. உறவாடுகிறது. இந்தத் தனியாள் தான் பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருக்கும் அரசியற் கட்சிகளை வென்று நிற்கிறார். இந்தத் தனியாளைத் தவிர்க்க முடியாமல் தான் பொதுஜன பெரமுனவும் ராஜபக்ஸவினரும் உள்ளனர். இந்தத் தனியாளுக்கு முன்னே தான் இப்பொழுது இனப்பிரச்சினைக்கான தீர்வும் முன்நிற்கிறது.

இது நமக்கு விருப்பமாக இருக்கலாம். இல்லாமல் போகலாம். ஆனால் இதுதான் அரசியல் யதார்த்தம். இந்த அரசியல் யதார்த்தில்தான் நாம் வேலை செய்ய வேண்டும்.

**கட்டுரையாளர்:**
**கிளிநொச்சியில் இருந்து**
**– கருணாகரன் –**



இதை விடுத்து, ரணில் நல்லவரா? கெட்டவரா? அவர் நம்பிக்கையானவரா? இல்லையா? அவர் சொல்வது நடக்குமா? இல்லையா? என்று குழம்பிக் கொண்டிருக்க முடியாது. இதைச் சரி பார்த்துக் கொள்வதற்கு பூவா தலையா என்று நாணயத்தைச் சுற்றிப் போட்டுப் பார்க்க முடியாது.

நம் முன்னே உள்ள களத்தை ஆட வேண்டும். அதற்குத் தயாராக வேண்டும்.

கடந்த ஐந்து மாதத்தில் ரணில் தன்னை முன்னிலைக்குக் கொண்டு வந்துள்ளார். கடந்த ஆண்டு அவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட தோற்கடிக்கப்பட்ட ஒருவர். பின்னர் ஒரு சாதாரண பாராளுமன்ற உறுப்பினர். அதிலிருந்து அதிரடியாக பிரதமரானார். அதிலிருந்து ஜனாதிபதியாகினார். இதெல்லாம் எப்படி நடந்தது?

சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் திறனால், அதற்கான துணிவினால்தான் இவையெல்லாம் சாத்தியமாகின. இதனால் தான் அவரை அரசியல் ரீதியாக எதிர்ப்போரும் விமர்சிப்போரும் பாராட்டுகிறார்கள். இதெல்லாம் யாரும் நினைப்பதைப் போல இலகுவானதல்ல. மக்களின் பேராதரவைப் பெற்றவர்கள், பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவ அடிப்படையில் பலமான தரப்பாக இருப்பவர்கள் எல்லாம் பின்னிற்க, ரணில் எப்படி முன்னுக்கு வந்தார்?

இதையெல்லாம் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே இன்றுள்ள அரசியல் யதார்த்தத்தின்படி நம்முன்னுள்ள சவால்களை ஏற்போம். பேச்சுகள் வெற்றியளிக்குமா இல்லையா என்பதை இப்பொழுதே தீர்மானிக்க முடியாது.. பேச்சுக்கு ஜனாதிபதி அழைக்கும் போது அவர் ஏதோ ஒரு திட்டத்தை மனதிற் கொண்டு தான் அழைத்திருப்பார். அந்தத் திட்டம் என்ன என்பதை அறிவது ஒரு பக்கமாக இருக்கட்டும். நாம் என்ன திட்டத்தை முன் வைப்பது? எப்படி இந்தப் பேச்சுகளை எதிர் கொள்வது? நடத்துவது என்று சிந்திப்போம். அது உடனடியாக நிகழ வேண்டும்.

செல்வம் அடைக்கலநாதனும் முருகேசு சந்திரகுமாரும் பிள்ளையானும் டக்ளஸ் தேவானந்தாவும் மெய்யாகவே தீர்வை நோக்கிச் சிந்திப்போரும் சொல்லியிருப்பதைப் போல இது இன்னொரு வாய்ப்பான சூழல். இதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வாய்ப்புகள் அதிரஷ்ட தேவதைகள். அவை எப்போதும் மலிவாகக் கிடைப்பதில்லை. அபூர்வமானவை.

# பேசப் போதல்

**நிலாந்தன்**
**யாழ்ப்பாணம்**

பத்து வருடங்கள் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்துவது பத்து நாட்கள் யுத்தம் செய்வதையும் விட எவ்வளவோ சிறந்தது இவ்வாறு தெரிவித்திருப்பவர் முன்னாள் குறேஷிய ஜனாதிபதி **Stjepan Mesic** அணிசேரா நாடுகளின் 14வது மகாநாடு 2006 செப்டம்பர் 16–17 ஹவானாவில் நடைபெற்றது. அதில் **Stjepan Mesić** பார்வையாளர் அந்தஸ்தோடு கலந்து கொண்டார். அவர் கூறியது ஒரு குரேஷிய யதார்த்தமாக இருக்கலாம். ஆனால் ஈழத்தமிழ் யதார்த்தம் அதுவல்ல.

தமிழ் மக்கள் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக சிங்களத் தரப்போடு பேசி வருகிறார்கள். கடந்த நூற்றாண்டின் முற்கூறில் தொடங்கி இந்த நூற்றாண்டின் முற்கூறு வரையிலுமான ஒரு நூற்றாண்டு கால அனுபவம் அது. இதில் ஆகப் பிந்திய அனுபவம் 2018 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஒரு யாப்புச் சதி முயற்சி மூலம் நிலைமாறுகால நீதிக்கான உடன்படிக்கையை முறித்தமை ஆகும்.

எனவே தமிழ் மக்கள் தமது கடந்த ஒரு நூற்றாண்டு கால அனுபவத்தின் அடிப்படையில் தான் பேச்சுவார்த்தைகளைப் பற்றிய ஒரு முடிவுக்கு வரலாம். இதில் தமிழ் மிதவாதிகளின் பேச்சுவார்த்தை அனுபவம், தமிழ் ஆயுதப் போராட்டத்தின் பேச்சுவார்த்தை அனுபவம் இரண்டையும் தொகுத்துப் பார்க்க வேண்டும். தமிழ் மிதவாதிகளின் பேச்சுவார்த்தை அனுபவம் எனப்படுவது இரண்டு கட்டங்களுக்குரியது. முதல் கட்டம், ஆயுதப் போராட்டம் வரையிலுமானது. இரண்டாம் கட்டம், ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரானது. அதாவது 2009க்கு பின்னரானது.

முதலாம் கட்டத்தில் தமிழ்த் தரப்பு சிங்களத் தரப்புடன் பல உடன்படிக்கைகளை செய்து கொண்டது. எவையும் வெற்றி பெறவில்லை. எல்லா உடன்படிக்கைகளும் ஒன்றில் ஏமாற்றத்தில் முடிவடைந்தன. அல்லது சிங்களத்தரப்பால் கிழித்தெறியப்பட்டன. வட்டமேசை மாநாடுகள், சதுர மேசை மாநாடுகள், அனைத்துக் கட்சி மாநாடுகள், நாடாளுமன்றத் தெரிவிக்குழுச் சந்திப்புகள் என்று எல்லா மாநாடுகளுமே காலத்தை கடத்தும் உத்திகளாகத் தான் காணப்பட்டன. இவ்வாறு தமிழ் மிதவாதம் பேச்சுவார்த்தைகளில் பெற்ற தோல்விகளின் விளைவாகத் தான் ஆயுதப் போராட்டம் தோற்றம் பெற்றது.

ஆயுதப் போராட்டம் ஒரு கட்ட வளர்ச்சிக்கு பின் பேச்சுவார்த்தைக்கு போனது. ஆனால் அந்த பேச்சுவார்த்தை உள்நாட்டில் நடக்கவில்லை. அது திம்புவில் இடம் பெற்றது. முதன் முதலாக இலங்கைத் தீவின் இனப்பிரச்சினை ஒரு வெளிநாட்டில் வைத்து பேசப்பட்டது. அதிலிருந்து தொடங்கி பல்வேறு வெளிநாட்டு தலைநகரங்களில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் அப்பேச்சுவார்த்தைகள் எல்லாவற்றினதும் முடிவு யுத்தமாகவே இருந்திருக்கிறது. அதாவது தமிழ் ஆயுதப் போராட்டமும் பேச்சுவார்த்தைகளில் வெற்றி பெறவில்லை.

இப்பொழுது ஆயுதப் போராட்டம் இல்லை. கடந்த 13 ஆண்டுகளாக தமிழ்த் தரப்பு சிங்களத் தரப்போடு பேசி வருகிறது. ஆனால் எதைப் பெற்றிருக்கிறது? மஹிந்த ராஜபக்ஷவோடு பல தடவைகள் தான் பேசியதாகவும் ஆனால் அச்சந்திப்புக்களின் முடிவில் நாம் ஏமாற்றம் அடைந்ததாகவும் சம்பந்தர் கூறுகிறார்.

ஒரு கொடூரமான போருக்கு பின்னரும் சிங்களத் தரப்பு எதையும் கற்றுக் கொள்ளவில்லை என்பதனை அது காட்டுகிறது. மிகக்குறிப்பாக போரில் வெற்றி பெற்ற சிங்களத் தரப்பு அந்த வெற்றியை அதாவது இராணுவ வெற்றியை ஓர் அரசியல் வெற்றியாக மாற்ற வேண்டும் என்று சிந்திக்க வில்லை. அதனால் தான் மஹிந்த ராஜபக்ஷ ஐநாவின் பொதுச்செயலாளர் பான் கீ மூனுக்கு வாக்களித்தபடி பொறுப்பு கூறலுக்குரிய பொருத்தமான வெளிப்படையான கட்டமைப்புகளை




உருவாக்கத் தவறினர். இதை இன்னொரு விதமாகவும் சொல்லலாம். 2009 இல் பெற்ற வெற்றி என்பது ஒரு இனப்படுகொலை மூலம் பெறப்பட்ட வெற்றியே. அதை அரசியல் வெற்றியாக மாற்றமுடியாது என்பதனால் தான் கடந்த 13 ஆண்டுகளாக அதை அரசியல் வெற்றியாக மாற்றக் கூடிய பேச்சுவார்த்தைகளை தொடங்க முடியவில்லை. 2009க்கு பின் ஐநாவின் தலையீடு வந்தது. ஆனால் ஐநா மனித உரிமைகள் பேரவையால் ஒரு பேச்சுவார்த்தையை ஊக்குவிக்க முடியவில்லை. 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட ஐநாவின் தீர்மானம் பொறுப்பு கூறலுக்கானது. அவ்வாறு பொறுப்பு கூறுவதில் தனக்குரிய பங்கின் பிரகாரம் அரசாங்கம் யாப்பை மாற்ற வேண்டும். ஆனால் அந்த யாப்புருவாக்க முயற்சிகளை, பொறுப்புகூறலின் பெற்றோரில் ஒருவரான மைத்திரிபால சிறிசேன 2018 ஆம் ஆண்டு காட்டிக் கொடுத்தார். ஓர் அனைத்துலக அரங்கில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொறுப்பில் இருந்து சிங்களத் தலைமைகள் எவ்வாறு பின்வாங்கும் என்பதற்கு அது 2009க்கு பின்னரான ஆகப்பிந்திய உதாரணம் ஆகும்.

நாங்கள் நிலைமாறு கால நீதியின் கீழ் கடந்த ஆறு ஆண்டுகளாக ஒரு பரிசோதனையைச் செய்து பார்த்தோம். அதில் வெற்றி பெறவில்லை" என்று சுமந்திரன் வவுனியாவில் வைத்து பகிரங்கமாகச் சொன்னார். மூன்று கட்சிகளையும் ஒருங்கிணைப்பதற்கான ஒரு சந்திப்பு வவுனியாவில் இடம் பெற்றபொழுது அவர் அதை ஒப்புக் கொண்டார். நிலைமாறுகால நீதியின் பங்காளியாக கூட்டமைப்பு செயற்பட்ட பொழுது நிலைமாறுகால நீதியை நியாயப்படுத்தியவர் அவர். அவரே அப்படிச் சொன்னார்.

எனவே தமிழ் சிங்களத் தரப்புக்கள் தங்களுக்கு இடையே பொருந்திக் கொண்ட உடன்படிக்கைகள் யாவும் எங்கே முறிந்தன? யாரால் முறிக்கப்பட்டன? என்ற கடந்த ஒரு நூற்றாண்டு கால அனுபவத்தை தொகுத்து பார்த்தால், மிகத் தெளிவாக ஒரு விடயம் தெரியும்.

அது என்னவெனில், சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது, எல்லா பேச்சுவார்த்தைகளையும் காலம் கடத்தும் உத்தியாகவும், வெளித் தரப்புகளை ஏமாற்றும் உத்திகளில் ஒன்றாகவும், தன்னை பலப்படுத்திக் கொள்வதற்கான கால அவகாசத்தை பெற்றுக் கொள்ளும் ஓர் உத்தியாகவுந் தான் அமைத்திருக்கின்றன. மாறாக விசுவாசமாக ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்தும் நோக்கில் அந்த பேச்சுவார்த்தைகள் அமையவில்லை. அதை அவர்கள் செய்யவும் மாட்டார்கள். ஏனென்றால் இலங்கைத்தீவை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியதாகக் கருதும் ஒரு மனோநிலை அது. அந்த மனோநிலையானது ஏனைய சிறிய தேசிய இனங்களை, தேசிய இனங்களாக ஏற்றுக் கொள்ளாது. எனவே கூட்டாட்சிக்கு அங்கே இடமில்லை. சிங்கள பௌத்த பெருந்தேசியவாத சிந்தனையானது ஒற்றையாட்சி தான் தனக்குப் பாதுகாப்பானது என்று கருதுகின்றது. சிறிய தீவை ஏனைய இனங்களுடன் பங்கிட தயாராற்ற ஒரு மனோநிலை அது. எனவே பல்லினத்தன்மை மிக்க, பல சமயப் பண்புமிக்க, இரு மொழிகளை ஏற்றுக் கொள்ளுகின்ற, ஒரு கூட்டாட்சிக்குப் போக அவர்களால் முடியாது. அவர்கள் கூட்டாட்சிக்கு தயார் இல்லை என்ற காரணத்தால் தான், எல்லா பேச்சுவார்த்தைகளையும் குழப்பினார்கள். அல்லது பேச்சு வார்த்தைகள் குழம்பின. ஏனென்றால் முழுமையான சமஷ்டி வழங்கப்பட்டிருந்திருந்தால் தமிழ்த் தரப்பு எப்பொழுதோ சமாதானம் அடைந்திருக்கும். ஆயுதப் போராட்டத்திற்கு தேவை ஏற்பட்டிருக்காது.

இதில் ஆயுதப் போராட்டம்தான் சிக்கல் என்றால் கடந்த 13 ஆண்டுகளாக ஒரு அரசியல் தீர்வை பெற முடியாமல் போனதற்கு யார் காரணம்? எனவே கடந்த ஒரு நூற்றாண்டுகால பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் தமிழ் தரப்பு மிகக் கவனமாக அடிகளை எடுத்து வைக்க வேண்டும். அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழ்த் தரப்புக்கும் சிங்களத் தரப்புக்கும் இடையிலான ஓர் அரசியல் உடன்படிக்கையில் இருந்து தான் தொடங்குகிறது. அவ்வாறு ஓர் உடன்படிக்கை முதலில் எழுதப்பட வேண்டும். தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு முன் மொழிவில் அது தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. எனவே தமிழ்–சிங்கள–முஸ்லிம் தரப்புகளுக்கு இடையே ஓர் அரசியல் உடன்படிக்கை முதலில் எழுதப்பட வேண்டும். அந்த அடிப்படையில் தான் யாப்பை மாற்றவேண்டும். ஆனால் அவ்வாறான ஏற்பாடுகள் அவையும் நடப்பதாகத் தெரியவில்லை.

ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் பொழுது இரண்டு விடயங்களை குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். ஒன்று ,வெளித் தரப்புகளின் தலையீடு இன்றி நாங்களாக பேசித் தீர்ப்போம் என்று. இரண்டாவது முன் நிபந்தனைகள் விதிக்க வேண்டாம் என்று. ஆனால் இவை இரண்டுமே தமிழ் மக்களைப் பொறுத்த வரை ரணில் விக்கிரமசிங்க முன் வைக்கும் முன் நிபந்தனைகள் தான். ஏனெனில் ஒரு மூன்றாவது தரப்பின் பிரசன்னம் இன்றி இலங்கைத் தீவில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்பது கடந்த ஒரு நூற்றாண்டு கால அனுபவம் ஆகும். அவ்வாறு மூன்றாவது தரப்பின் பிரசன்னம் இல்லையென்றால் அது தமிழ்மக்களுக்கு பாதகமாக முடியும்.

ஏனென்றால் எல்லாத் தேசிய இனப்பிரச்சினைகளும் புவிசார் அரசியல் பிரச்சினைகள் தான். அவற்றுக்கு புவிசார் அரசியல் தீர்வுதான் உண்டு.அல்லது அனைத்துலகத் தீர்வு தான் உண்டு. எனவே ஒரு புவிசார் அரசியல் பிரச்சினையை உள்நாட்டு பிரச்சினையாக குறுக்குவது என்பது அடிப்படையில் ஓர் அரசியல் உத்திதான். திம்புவில் தொடங்கி ஒஸ்லோ வரையிலும் வெளிநாட்டுக் களங்களில் நடந்த பேச்சுவார்த்தைகளை மீண்டும் கொழும்புக்குள் குறுக்குவது என்பது ஒரு ரிவேர்ஸ் நடவடிக்கை தான். அதற்கு தமிழ்த் தரப்பு ஒத்துக் கொள்ளக் கூடாது. இரண்டாவது முன் நிபந்தனை முன் நிபந்தனை விதிக்க கூடாது என்று கூறுவது.

தமிழ் மக்களில் இப்பொழுது மிஞ்சியிருக்கும் அனைவரும் ஒரு இனப்படுகொலையில் இருந்து தப்பி பிழைத்தவர்கள் தான். அந்த அனுபவத்தில் இருந்து தான் அவர்கள் சிந்திப்பார்கள். கடந்த ஒரு நூற்றாண்டு கால பேச்சு வார்த்தை அனுபவத்தின்படி பேச்சு வார்த்தைகள் ஒரு பொறியாக மாறக்கூடாது. எனவே அரசாங்கம் விசுவாசமாக பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுகிறது என்பதனை நிரூபிக்கும் விதத்தில் இனங்களுக்கு இடையே நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அது கடந்த ஒரு நூற்றாண்டு கால தமிழ் அனுபவத்தில் இருந்து முன்வைக்கப்படும் ஒரு முன்நிபந்தனை ஆகும்.

பேச்சுவார்த்தைக்கு தேவையான ஒரு நல்லெண்ணச் சூழலை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முதலில் ஆக்கிரமிப்புகளை நிறுத்த வேண்டும். ஒரு புறம் அரச திணைக்களங்கள் நிலத்தைப் பிடிக்கின்றன. பிடிப்பட்ட நிலங்கள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. நிலத்தை விடுவிப்பதென்றால் ராணுவமய நீக்கம் செய்ய வேண்டும். காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கு நீதியும் பொருத்தமான நிவாரணமும் கிடைக்க வேண்டும். அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும்.

எனவே இந்த நிபந்தனைகளை தமிழ்த் தரப்பு இறுக்கமாக வலியுறுத்த வேண்டும். ஏனெனில் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பலஸ்தீனர்கள் கூறுவது தமிழ்த் தரப்புக்கும் பொருத்தமானது.

பலஸ்தீனர்கள் பின்வருமாறு கூறுவார்கள் நாங்கள் பீசாவை எப்படிப் பங்கிடுவது என்று அவர்களோடு – யூதர்களோடு பேசிக் கொண்டிருப்போம். ஆனால் நாங்கள் இரண்டு தரப்பும் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே அவர்கள் – யூதர்கள் – பீசாவைச் சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள்.

# ரணில் விக்கிரமசிங்காவின் அழைப்புக்கு தமிழரின் பதில்?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கின்றார். இதனை எவ்வாறு எதிர் கொள்ளலாமென்பது, தமிழர் பக்கத்திலுள்ள கேள்வி. வழமை போல் பல பதில்கள் கூறப்படுகின்றன. சமஷ்டியை அடிப்படையாகக் கொண்டு பேச வேண்டுமென்பது ஒரு பதில். சமஷ்டியை அடிப்படையாகக் கொள்ளா விட்டால் பேசவே கூடாதென்பது இன்னொரு பதில். மூன்றாம் தரப்பொன்றின் மேற்பார்வையில் தான் பேச வேண்டுமென்பது இன்னொரு பதில்.

சமஷ்டியை முன் வைப்பது பிரச்சினையில்லை. ஆனால் இன்றைய சூழலில் கையாளக்கூடிய விடயங்களை கையாளும் வகையில் தான் பேச வேண்டுமென்பது இன்னொரு பதில். இவற்றுள் எது சரியான பதில்? எது சரி அல்லது பிறையென்னும் கேள்விக்குப் பதிலை தேடுவதற்கு முன்பதாக, தமிழரின் இன்றைய நிலைமையை நோக்குவோம்.

ஏனெனில், எந்தவொரு றுதித் தீர்மானத்திற்கு வருவதற்கு முன்னரும் நமது பலம் மற்றும் பலவீனங்களை, நமக்கு முன்னாலுள்ள சவால்களை, அந்த சவால்களை வெற்றி கொள்வதற்கான வாய்ப்புகளை துல்லியமாக ஆராய்ந்து கொள்வது அவசியம்.

முதலில் ஒரு விடயத்தை தெளிவாக குறித்துக் கொள்வோம். அதாவது, நமது இதுவரையான அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்திருக்கின்றன. உள்நாட்டுக்குள் பிரச்சினையை நீர்த்துக் கொள்வதற்கான முயற்சிகளும் தோல்வியடைந்திருக்கின்றன. வெளிநாடுகளின் ஆதரவில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளும் தோல்வியடைந்திருக்கின்றன. இந்தத் தோல்விகளிலிருந்து நாம் எதனை கற்றுக் கொண்டிருக்கின்றோம்?

இந்தத் தோல்விகள் இரண்டு விடயங்களை எமக்கு கற்றுத் தந்திருக்கின்றன. ஒன்று, பலமான நிலையிலிருக்கும் சிங்களவர்களும் பலவீனமான நிலையிலிருக்கும் தமிழர்களும் ஒரு பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்து, பிரச்சினைகளை சாதகமாக தீர்த்துக் கொள்ள முடியாது.

இரண்டு, ஒரு நியாயமான அரசியல் தீர்விற்கு வெளியாரின் ஆதரவு கட்டாயமானது. இந்த இரண்டு படிப்பினைகளிலிருந்தும் தான், நாம் ஒவ்வொரு விடயங்களையும் அணுக வேண்டியிருக்கின்றது.

மேற்படி இரண்டு படிப்பினைகளிலிருந்தும் விடயங்களை ஆராய்வோம். சிலர் ஒரு எதிர் கேள்வியையும் முன் வைக்கலாம். ஏன் சிங்களவர்களும் தமிழர்களும் இணைந்து பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது? அவ்வாறான முயற்சிகள் அனைத்துமே தோல்வியடைந்திருக்கின்றன.

இதற்கு பண்டா- செல்வா உடன்பாடு தொடக்கம் ரணில்-மைத்திரி ஆட்சிக் காலம் வரையில் தெளிவான சான்றுகளாகும். இதனையும் தாண்டி சிங்களவர்களும் தமிழர்களும் வெளியாரின் தலையீடின்றி பேசுவதாயின் அந்தப் பேச்சுவார்த்தையில் சிங்கள ஆளும் வர்க்கத்தின் கருணையே முதன்மையாக இருக்கும். சிங்களவர்களது கருணையின் எல்லை தான், தமிழர்களுக்கான தீர்வாகும்.

ஏனெனில் அவர்களை நிர்ப்பந்திப்பதற்கான எந்தவொரு பலமும் தமிழர்களிடம் இல்லை. அவர்களது கருணையை நம்பி ஒரு பேச்சுவார்த்தையை முன்னெடுக்க முடியுமா? ரணில்-மைத்திரி ஆட்சிக் கால பேச்சுவார்த்தைகள் அவ்வாறானதொரு அணுகுமுறையில் தான் முன்னெடுக்கப்பட்டது. எவரதும் தலையீடில்லாமல் வெறுமனே ரணில் விக்கிரமசிங்கவோடும் இன்னும் சிலரோடும் பேசிவிட்டால் பிரச்சினைகளை தீர்த்து விடலாமென்று தான் சம்பந்தன் தரப்பு கருதியது. ஆனால் அது நடைபெறவில்லை. அது நடைபெறாது என்பதை ஏற்கனவே இந்தக் கட்டுரை



யாளர் குறிப்பிட்டிருந்தார். இந்த படிப்பினையிலிருந்து சிந்தித்தால் வெளியாரின் அழுத்தம் கட்டாயமானது. இந்த இடத்தில் எழும் அடுத்த கேள்வி, அந்த வெளியார் யார்? வெளியாரின் தலையீட்டை ஏற்படுத்துவது எவ்வாறு? தமிழரின் தேசிய இனப்பிரச்சினை வரலாற்றில் இரண்டு வகை யான வெளித் தலையீடுகள் இதுவரையில் நிகழ்ந்திருக்கின்றன.

இந்த இரண்டு தலையீடுகளின் போதும் சிங்கள ஆளும் வர்க்கம் சில விடயங்களில் கீழிறங்கி வந்தது.

இந்த இரண்டு தலையீடுகளின் போதும் தமிழ்த் தேசிய அரசியல் ஆயுத பலத்துடனிருந்தது. சிங்களவர்களை நிர்ப்பந்திக்கும் பலத்துடன் தமிழர்கள் இருந்தனர். ஆனால் இப்போதைய நிலைமை முற்றிலும் மாறானது.

வெளியாரின் மேற்படி இரண்டு தலையீடுகளுக்குமிடையில் ஒரு அடிப்படையான வேறுபாடுமுண்டு. அதாவது, இந்தியாவின் தலையீடு முற்றிலும் இந்தியாவின் தலையீடு மட்டும் தான், அதற்கு ஒரு பிராந்திய தன்மை மட்டுமேயுண்டு. ஆனால் நோர்வேயின் மத்தியஸ்தம் அப்படியல்ல. அது பல மேற்குலக நாடுகளை இணைத்தது. இலங்கையின் இனப்பிரச்சினையை மேற்குலகின் பார்வைக்குள் கொண்டு சென்றது.

.இில் இந்தியா முற்றிலுமாக விலகியிருந்தது. ஆனாலும், விடயங்கள் ஒவ்வொன்றையும் புதுடில்லிக்கு தெரியப்படுத்தும் பணியை, நோர்வே முன்னெடுத்திருந்தது. பேச்சுவார்த்தைக் காலத்தில், எரிக் சொல்ஹெய்ம் புதுடில்லியுடன் நெருங்கிச் செயற்பட்டிருந்தார். புதுடில்லியின் கரிசனைகள் தொடர்பில் சொல்ஹெய்மிடம் தெளிவான பார்வையிருந்தது. இதனை அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டிருக்கின்றார்.

நோர்வேயின் மத்தியஸ்தத்தை அரசியல் ரீதியில் பிறிதொரு கோணத்திலும் நோக்கலாம். அதாவது, பிராந்திய சக்தியான இந்தியாவின் அரசியல் தீர்வு முயற்சிகள் தோல்வியடைந்திருக்கும் நிலையில், அதனை நோர்வே-மேற்குலகின் மத்தியஸ்தத்தின் கீழ் சரி செய்யும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் ஆரம்பத்திலிருந்தே இந்த முயற்சியில் நோர்வே வெற்றி பெறப் போவதில்லையென்னும் பார்வையே புதுடில்லியிடம் இருந்தது. இந்த பேச்சுவார்த்தை முயற்சி தொடர்பில், அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங்ஹாவுடனான சந்திப்பின் போது, அவர் சொல்ஹெய்முக்கு தெரிவித்த கருத்துகளே இதற்கு சான்றாகும். இதில் பத்து வருடங்களை செலவழித்தாலும் கூட, நீங்கள், ஒரு பங்களிப்பை வழங்கியவர்களாக மட்டுமேயிருக்க முடியும். ஏனெனில், இந்தப் பிரச்சினை அந்தளவு சிக்கலானதென்று சிங்ஹா கூறியிருந்தார். அவர் கூறியதன் தார்ப்பரியத்தை தான், பின்னர் உணர்ந்து கொண்டதாக சொல்ஹெய்ம் கூறுகின்றார். நோர்வேயின் தலையீட்டிற்கு சட்டபூர்வமான தகுதியில்லை. ஏனெனில், அது முரண்பாடுள்ள இரண்டு தரப்புகளுக்கிடையிலான உடன்பாடாக மட்டுமேயிருந்தது. எப்போது யுத்தம் மீளவும் ஆரம்பித்ததோ, அப்போதே நோர்வேயின் தலையீடு முடிவுக்கு வந்து விட்டது.

ஒருவேளை, ரணில்-பிரபா உடன்பாட்டுக்கு மாறாக, ஒரு மூன்றாம் தரப்பு இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டிருந்தால், அந்த உடன்பாட்டின் பெமதி வேறாக .இருந்திருக்கும். இந்த இடத்தில் தான் இந்திய-.லங்கை ஒப்பந்தம் தனித்துவமானதாக இருக்கின்றது.

ஏனெனில் இந்திய-.இலங்கை ஒப்பந்தம் இரண்டு நாடுகளின் தலைவர்களுக்கிடையிலானது. அதனால் தான், அது இப்போதும் பேசப்படும் ஒன்றாக இருக்கின்றது. இந்திய-.இலங்கை ஒப்பந்தம் நிரந்தரமானது. வேறு எந்த வொரு தரப்பிற்கும் இவ்வாறானதொரு இடமில்லை. உதாரணமாக அமெரிக்காவை எடுத்துக் கொண்டால், அதன் ஈடுபாடுகள் அனைத்துமே மனித உரிமைகள் தொடர்பிலான உலகளாவிய கரிசனையை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த எல்லைக்குள் தான் அமெரிக்கா விடயங்களைக் கையாளும்.

இந்த பின்புலத்தில் சிந்தித்தால், ஒரு புதிய மூன்றாம் தரப்பு என்பதும் சாத்தியமான ஒன்றாகத் தெரியவில்லை. ஏனெனில் ஒரு மூன்றாம் தரப்பு என்பது முரண்பாடுள்ள இரண்டு தரப்புகளும் இணைந்து அழைத்தால் மட்டுமே சாத்தியப்படும். இரண்டு தரப்பின் அழைப்பில்தான் ஒரு வெளிநாடு இலங்கையின் விவகாரத்தில் பங்களிக்க முடியும்.நிச்சயமாக கொழும்பு அதனை ஆதரிக்காது. இந்த நிலையில் தமிழர்கள் மட்டும் மூன்றாம் தரப்பைக் கோருவது, வெறும் ஒரு கோரிக்கையாக மட்டுமேயிருக்கும். இந்த இடத்தில் என்ன செய்வது? ஆனாலும் மூன்றாம் தரப்பை அணுகுவதற்கு ஒரு வழியுண்டு. அது இந்திய இலங்கை ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் தான் ஈழத்தமிழர்களை பொறுத்தவரையில் மூன்றாம் தரப்பாகும். இந்த ஒப்பந்தத்தை கையிலெடுக்கும் போது, அதன் மூலம் இந்தியாவின் ஆலோசனையை கோரலாம். இதனைக் கோருவதற்கு ஈழத் தமிழர்களுக்கு உரித்துண்டு. ஏனெனில் ஈழத்தமிழர்கள் சார்பில் இந்தியாவே கையெழுத்திட்டிருக்கின்றது.

இந்த அடிப்படையில் இந்தியாவை அணுகும் போது, கொழும்பும் ஒரு கட்டத்திற்கு மேல் அதனை தடுக்க முடியாது. ஏனெனில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில், அதற்கான உரித்து இந்தியாவிற்குண்டு. இந்த அடிப்படையில் சிந்தித்தால், இந்திய-இலங்கை ஒப்பந்தமானது ஒரே நேரத்தில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்விற்கான பேச்சுவார்த்தையின் அடிப்படையாகவும் இருக்க முடியும்.

அதே வேளை, ஒரு மூன்றாம் தரப்பாகவும் தொழிற்பட முடியும். .தனையே தமிழர்கள் தங்களின் பலமாக பிரயோகிக்க வேண்டும். ரணியின் அழைப்புக்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டுமென்னும் கேள்விக்கான பதிலை. இந்த இடத்திலிருந்து தான் நாம் நோக்க வேண்டும்.

எனவே ரணிலின் அழைப்பிற்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டுமென்னும் கேள்விக்கான பதில் ஒன்று தான். அதாவது, சமஷ்டி அடிப்படையில் பேசுவதை விடுத்து, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை பேச்சு வார்த்தைக்கான ஆரம்பப் புள்ளியாக கைக் கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படையில், மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும். அரசியலமைப்பின் 13வுள்ள விடயங்களை அமுல்படுத்த வேண்டும். அடுத்தது, மாகாண சபை சட்டத்தை திருத்தியமைக்க வேண்டும். அதனை சாதாரண பாராளுமன்ற பெரும்பான்மையின் கீழ் முன்னெடுக்க முடியும். இவ்வாறான விடயங்களை ஒரு நிபந்தனையாக முன்வைக்க வேண்டியதில்லை.

மாறாக, எதிர்கால பேச்சுவார்த்தைக்கான நல்லிணக்க அரசியல் முன்னெடுப்புகளாக கோர முடியும். இவற்றை கொழும்பு முன்னெடுத்துக் கொண்டு செல்லும் போது, மேற்கொண்டு விடயங்களை பேசலாமென்று கூற வேண்டும். இந்த அடிப்படையில்தான் ரணிலுக்கான தமிழரின் பதில் அமைய வேண்டும். அவ்வாறில்லாது அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரண தேவியென்னும் அடிப்படையில் விடயங்களை கையாள முற்பட்டால், மீளவும் தமிழர்கள் வெறுங்கையுடன் தான் திரும்ப வேண்டியேற்படும்.

(5ம் பக்கத் தொடர்ச்சி) ஒடுவதில் பொருளில்லை. அதனை அறிவு கொண்டும் அதே தந்திரம் கொண்டும் தான் நாமும் எதிர் கொள்ள வேண்டும். தமிழ்த் தேசிய அரசியல் வரலாறு பல ஏற்ற இறக்கங்களுடன் பயணித்தி இருக்கின்றது. ஒவ்வொரு ஏற்ற இறக்கங்களும் நமக்கான அனுபவங்களாகும். இந்த அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்வதிலும் - கற்றுக்கொண்டதிலிருந்து முன்னோக்கி பயணிப்பதிலும் தான் நமது கெட்டித்தனம் இருக்கின்றது

# இந்திய இராஜதந்திரிகளது இரகசிய கொழும்பு வருகையும் தென்னிலங்கையில் தோண்டப்படும் இந்திய எதிர்ப்பு வாதங்களும்

கட்டுரையாளர்
தாயகத்தில் இருந்து
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்



இராஜதந்திரிகள் இரகசியமாக ,இலங்கைக்கு வருகை தந்து போகின்றனர் என்ற கேள்வி நியாயமானதாகவே தெரிகிறது. அதனை இந்திய அரசாங்கம் போன்று இந்திய ஊடகங்களும் இரகசியம் பேண முயலும் போது சிங்கள ஊடகங்கள் ஏன் அதனை அம்பலப்படுத்த முயல்கின்றன என்ற சந்தேகம் நியாயமானதாகவே தெரிகிறது. இவற்றைத் தேடுவதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஓர் இராஜதந்திர நெருக்கடி நீடிக்கிறதாகவே தெரிகிறது. ஆனால் இந்திய- இலங்கை இராஜதந்திரிகள் மீள மீள இரு நாட்டுக்கும் பரஸ்பரம் விஜயம் செய்வதும் உரையாடுவதும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. முரண்பாடு முடிவுக்கு வந்ததாகத் தெரியவில்லை. ஏதோவொரு இழுபறி நிகழ்வதாக உணரப்படுகிறது, இந்தியா இலங்கையிடம் பாரிய கோரிக்கை ஒன்றினை முன் வைத்துள்ளதாக தெரிய வருகிறது.

சீனா தொடர்பில் இலங்கை பின்பற்ற வேண்டிய விடயத்தை, உறுதிமொழியை இந்தியா கோரியதாகவும் அதற்கு இலங்கை முழுமையாக உத்தவாதம் வழங்க தயாரில்லாத நிலை உள்ளதாகவும் கொழும்பு இராஜதந்திரிகள் குதிப்பிடுகின்றனர். அதே நேரம் ,லங்கைக்கான சீனத் தூதரகம் இலங்கைக்கு நிதி வழங்குவதிலும் தொடர்ச்சியாக இலங்கைக்கு பொருளாதார உதவி வழங்கத் தயாராக இருப்பதாகவும் வலியுறுத்தி வருகிறது. அதனைக் கூட ஜனாதிபதியை சந்திப்பதன் மூலம் உறுதிப்படுத்தி வருகின்றதைக் காண முடிகிறது.

அதேநேரம் இந்தியாவின் உதவிகளை அதிகரிப்பதற்கும் இரு நாடுகளுக்கு மிடையில் மேற் கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்பாட்டை திருத்துவதற்குமான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அதனடிப்படையில் பொருளாதார உறுதிப்பாடும் னங்களில் ஈடுபட்டு வருகின்றன. தமது நாட்டு ரூபாவை இலங்கையில் செயல்படுத்துவதற்கு இந்தியா முயற்சிக்கிறது. அவ்வாறு நடந்தால் இலங்கை இந்தியாவின் மாநிலமாக மாறக்கூடிய சூழ்நிலை தானாகவே உருவாகி விடும் என்றார். மேலும் அவர் குறிப்பிடும் போது நாட்டில் போராட்டங்களை தூண்டி விட்டு அராஜக நிலையொன்றை உருவாக்குவதற்கு மேற்குலக நாடுகள் திட்டம் தீட்டுகின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

இது இந்திய மேற்கு எதிர்ப்பு வாதமாகவே தெரிகிறது. ஏறக்குறைய சிங்கள மக்களது தேசிய உணர்வைத் தூண்டுவதற்கான நகர்வாகவே உள்ளது. கடந்த காலம் முழுவதும் இந்திய எதிர்ப்பு வாதத்தினாலேயே இலங்கைத் தமிழர் இனப்பிரச்சினை கையாளப்பட்டதுடன், இந்தியா மீதான எதிர்ப்புவாதமே தமிழர் மீதான தாக்குதலாக அமைந்திருந்தது.

அதன் நீட்சியையே பாராளுமன்ற உறப்பினரது உரை உணர்த்துகிறது. அரகலய போராட்டத்திற்குப் பின்னர் காணப்பட்ட நிலை படிப்படியாக மாற்ற பெரும்பான்மை அரசியல்வாதிகள் முயல்வதாக புரிந்து கொள்ளப் படுகிறது. மறு பக்கத்தில் இந்தியாவும் சீனாவும் இந்து சமுத்திரப் போட்டியில் இந்து சமுத்திர நாடுகளுடன் சந்திப்புகளை நிகழ்த்தியுள்ளன.

24.11.2022 அன்று ,ந்து சமுத்திரத்தின் கரையோர நாடுகள் (**Indian Ocean Rim Countries**) பங்களாதேஷ். தலைநகரில் ஒன்று கூடியிருந்தன. இதில் 24 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

2023 ஆண்டுக்கான மகாநாட்டின் தலைமைப் பொறுப்பை இலங்கை பொறுப்பேற்க உள்ளது. இதேநேரம் 21.11.2022 அன்று சீனாவின் யுனான் மாகாணத்தின் கும்மிங் நகரத்தில் சீனா-இந்து சமுத்திர நாடுகளுடனான சந்திப்பொன்று நிகழ்ந்துள்ளது. ஏறக்குறைய 19 இந்து சமுத்திர நாடுகள் பங்குபற்றியுள்ளன.

இந்திய இராஜதந்திரிகளது இரகசிய இலங்கைப் பயணம் குறித்து சிங்கள ஊடகங்கள் ஆரம்பத்தில் முதன்மைப் படுத்தின.

தற்போது தென்னிலங்கை ஆங்கில ஊடகங்களும் அத்தகைய செய்திகளை முதன்மைப்படுத்த ஆரம்பித்துள்ளன. குறிப்பாக இந்திய பாதுகாப்புச் செயலாளர் அஜித் டோனால் மற்றும் இந்திய புலனாய்வு அமைப்பான றோவின் தலைமை நிர்வாகி சமந்த்



கோயாலே ஆகிய இருவரது இலங்கை வருகை அதிக முக்கியத்துவம் பெற்றதாக உள்ளது. ஏன் அத்தகைய தேசியக் கொள்கையும் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இத்தகைய செய்முறைகளாலேயே பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நுவரெலியா மாவட்டத்தில் நிகழ்ந்த சந்திப்பொன்றில் தெரி



வித்த விடயம் கவனத்திற்குரியதாகும். அதாவது இலங்கை, பொருளாதார ரீதியில் பலமிழந்துள்ளது. இதனை முதன்மைப்படுத்திக் கொண்ட வலுவான நாடுகள், இலங்கையின் கழுத்தை இறுக்கிப் பிடிக்க முற்படுகின்றன,

தமது உபாயத்திற்குள் இலங்கையை கொண்டு வருவதற்கு கடும் பிரயத்த இந்தியா தவிர்ந்த இந்து சமுத்திர நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாக தெரிய வருகிறது. மாலைதீவு மற்றும் அவுஸ்திரேலியாவின் அரச பிரதிநிதிகள் கலந்து கொள்ளாத

போதும் முன்னாள் தலைவர்கள் அதில் கலந்து கொண்டதாக தெரிய வருகிறது. இரு மகாநாட்டிலும் இலங்கை கலந்துகொண்டதுடன், சீனாவின் சந்திப்பில் இலங்கையின் முக்கியத்துவம் பற்றி சீனப் பிரதிநிதி அதிகம் முதன்மைப்படுத்தி உரையாடியதும் இலங்கைத் தீவின் வகிபாகம் சார்ந்து முதன்மைப்படுத்தப்பட்டதும் நினைவு கொள்ளத்தக்கது.

இதேநேரம் தமிழக புவனாய்வுத்துறையின் சீனா பற்றிய எச்சரிக்கைகளை அடுத்து நிகழ்ந்த கோவைக் குண்டு வெடிப்பு அதிக சந்தேகங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழகம் மட்டுமல்ல இந்திய கரையோரப் பகுதியும் அதிக கண்காணிப்புக்குள் வந்துள்ளதாக தெரிய வருகிறது. இவ்வாறே இலங்கையின் வான் பாதுகாப்புப் பொறுத்து சில சர்ச்சைகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிகழ்வதாக உறுதிப்படுத்த முடியாத தகவல்களுக் கூடாக தெரிய வருகிறது. மேலும் ராஜஸ்தான் மாநிலத்தில் இந்தியா பெரும் போர் ஒத்திகை ஒன்றை மேற்கொண்டு வருகிறது. இந்திய வான்படையும் தரைப் படையும் இணைந்து நடத்தும் ஒத்திகையில் முதல் தடவையாக கதிரியக்கத் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இந்திய வான்படை தரை இலக்குகளை தாக்கும் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது.

இதில் அமெரிக்கப் படைகளும் இணைய இருப்பதாக தகவல்கள் உண்டு. அது சரியான தகவலா என்பது உறுதிப்படுத்த முடியவில்லை. இத்தகைய நிலைமைகளிலேயே இந்திய இராஜதந்திரிகள் இலங்கைத் தீவை நோக்கி இரகசியமாக நகர்கின்றனர். அவர்களது உரையாடல்களில் பொருளாதார ஒத்துழைப்புக்கு பதிலான பிராந்திய பாதுகாப்புக்கான விண்ணப்பங்கள் அதிகம் நிகழ்வதாக தகவல்கள் உண்டு.

குறிப்பாக சீனா மற்றும் பாகிஸ்தான் தூதுவரது வடக்கு, கிழக்கு விஜயம் தொடர்பில் அதிக விடயம் ,ந்திய இராஜதந்திரிகளால் இலங்கை ஜனாதிபதியுடன் (22ம் பக்கம் பார்க்க)



# திறக்கப்படும் மற்றொரு கதவு

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையம் மீண்டும் பரபரப்பை தோற்றுவித்திருக்கிறது.

இலங்கை வர்த்தக சபையின் பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கிழக்கு கொள்கலன் முனையத்தை ஜப்பானுக்கு வழங்கியுள்ளதாகவும், அதனை ஜப்பான் நிராகரித்தால் வேறு நாடுகளுக்கு வழங்குவது குறித்து ஆலோசிக்கப்படும் என்றும் கூறியிருந்தார்.

கிழக்கு கொள்கலன் முனையம் மற்றும் கொழும்பு இலகு ரயில் திட்டம் என்பனவற்றை மீண்டும் ஜப்பானுக்கு வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக சில வாரங்களுக்கு முன்னர் அரசல் புரவலாக தகவல்கள் வெளியாகின.

எனினும், அதனை அரசாங்கம் நிராகரித்திருந்ததுடன், ஜப்பானும் தங்களுக்கு அவ்வாறான திட்டம் ஏதும் இல்லை என்று கூறியிருந்தது. இந்த நிலையில் திடீரென, ஜப்பானின் பக்கம் பந்தை வீசியிருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இது பற்றி அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளரான பந்துல குணவர்த்தன உறுதிப்படுத்தியிருக்கிறார்.

கிழக்கு முனையத்தை ஜப்பானுக்கு வழங்குவது குறித்து அமைச்சரவையில் கலந்துரையாடப்படவில்லை என்றும், ஆனால் நாட்டின் அந்நியச் செலவாணி கையிருப்பை அதிகரிப்பதற்கு, அரசாங்க சொத்துக்களை விற்பதை விட வேறு வழியில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

கிழக்கு கொள்கலன் முனையத்தை ஜப்பானுக்கு வழங்குவதற்கு அதிகாரபூர்வமற்ற வகையில் கலந்துரையாடப்பட்டிருக்கிறது என்பதையே இது உறுதிப்படுத்தியிருக்கிறது.

கிழக்கு கொள்கலன் முனையத் திட்டத்தை இந்தியா ஜப்பான் கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கு, நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது, முத்தரப்பு உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்பட்டது.

அது போன்றே, கொழும்பில் போக்குவரத்தை இலகுபடுத்த, 1.3 பில்லியன் டொலர்கள் செலவில், மோனோ ரயில் திட்டத்தை, முன்னெடுக்கும் உடன்பாடும் ஜப்பானுடன் செய்து கொள்ளப்பட்டது.

ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இந்த இரண்டு திட்டங்கள் அல்லது உடன்பாடுகளையும், கிழித்தெறிந்தது. இதனால் ஆரம்ப திட்ட மதிப்பீடுகளுக்காக செலவிடப்பட்ட 5.978 பில்லியன் ரூபா இழப்பு நாட்டுக்கு ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கைகள் கூறுகின்றன.

அதேவேளை, கிழக்கு கொள்கலன் முனையத்தை ஜப்பானுக்கோ அல்லது இந்தியாவுக்கோ வழங்க முடியாது என்று கோட்டா அரசாங்கம் முடிவெடுத்தது. அதற்குப் பின்னால், சீனா இருந்தது என்ற வலுவான குற்றச்சாட்டுகள் இருந்தன. அப்போது அரசாங்கத்துக்குள் அமைச்சர்களாக இருந்த விமல் வீரவன்ச உதய கம்மன்பில ஆகியோர், கிழக்கு கொள்கலன் முனையத் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர்.

அவர்களின் ஊடாகவே, துறைமுக தொழிற்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு வேலை நிறுத்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதையடுத்து, கிழக்கு கொள்கலன் முனையம் எந்த நாட்டுக்கும் வழங்கப்படாது, அதனை துறைமுக அதிகார சபையே அபிவிருத்தி செய்யும் என்று அறிவித்திருந்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷஷ.

அதனை அவர் அறிவித்த போது, நாட்டின் பொருளாதார நிலை ஒன்றும் மேன்மையான நிலையில் இருக்கவில்லை. பொருளாதார பேரழிவு ஒன்று நெருங்கி வருவது குறித்து அரசாங்கத்துக்கு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஆனாலும், சீனாவைத் திருப்திப்படுத்துவதற்காகவே, கோட்டா அரசாங்கம், அந்த முடிவை எடுத்தது.

அது போலவே, ஜப்பானின் உதவியுடன் மேற்கொள்ளப்படவிருந்த மோனோ ரயில் திட்டத்தையும்




கோட்டா அரசாங்கம் ரத்துச் செய்தது. அந்த ரண்டு முடிவுகளும், இலங்கைக்கும் இந்தியா மற்றும் ஜப்பானுக்கும் இடையில் ராஜதந்திர உறவுகளை சீரழித்து விட்டது.

இந்த இடைவெளியை நிரப்புவதற்காகவும், பொருளாதார நெருக்கடியை சமாளிக்கவும், கோட்டாபய ராஜபக்ஷ பின்னர் ஒரு கட்டத்தில், மேற்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்கினார். 700 மில்லியன் டொலர்கள் முதலீட்டில் அதானி நிறுவனத்துடன் அதற்கான உடன்பாட்டில் கையெழுத்திடப்பட்டது. அந்த திட்டம் இப்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அது போலவே ஜப்பானின் `மோனோ' ரயில் திட்டத்தை இரத்துச் செய்த கோட்டாபய ராஜபக்ஷ, பின்னர், அதே திட்டத்தை முன்னெடுப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டார்.

இந்த இரண்டு திட்டங்களையும் முன்னெடுப்பதற்கு கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் அனுமதியளித்திருந்தால், இந்தளவுக்கும் அந்த திட்டங்கள் பெருமளவில் நிறைவடையும் கட்டத்தை நெருங்கியிருக்கும்.

அதேவேளை கிழக்கு கொள்கலன் முனையத் திட்டத்தை துறைமுக அதிகார சபை மூன்று கட்டங்களாக அபிவிருத்தி செய்து வருகின்ற போதும், பொருளாதார நெருக்கடியால் அந்த திட்டம் கேள்விக்குறியாக மாறியிருக்கிறது.

இதன் முதல் கட்டம், அடுத்த ஆண்டு ஜீலையிலும், அடுத்த கட்டம், 2024 ஜனவரியிலும், முழுப்பணிகளும், 2025 ஜனவரியில் நிறைவடைய வேண்டும். 550 மில்லியன் டொலர்கள் செலவிலான இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு துறைமுக அதிகார சபையிடம் போதிய நிதி வசதி இல்லை.

கட்டுமானப் பணிகளை விட, இந்த முனையத்தில் பொருத்தப்பட வேண்டிய பாரம் தூக்கிகள் மற்றும், கொள்கலன்களைக் கையாளுகின்ற கருவிகளையும் இறக்குமதி செய்வதற்கு அதிகளவு நிதி தேவை.

முதற்கட்டமாக விரிவாக்கப்படும் கொள்கலன் மேடையில் பொருத்தப்படுவதற்கான பாரம் தூக்கிகளை சீனாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கான கொள்வனவுக் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ள போதும், அதற்குச் செலுத்துவதற்கு போதிய வெளிநாட்டு நாணய கையிருப்பு அரசாங்கத்திடம் இல்லை. இந்த கொள்கலன் முனையத்தை அமைக்கும் பணிகளை அரசாங்கம் வெற் றிகரமாக முன்னெடுத்தால், வெளிநாட்டு நாணய வருமானத்தை தேடிக் கொள்வதற்கு வாய்ப்பாக அமையும்.

ஆனால், அந்த திட்டங்களை பூர்த்தி செய்யக் கூடிய இயலுமை தற்போது அரசாங்கத்திடம் இல்லை என்று தெரிகிறது. அதனால் தான், ஜப்பானுக்கு அதனை வழங்குவது குறித்து, ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்கும், `மோனோ' ரயில் திட்டத்தை ஜப்பானும் செயற்படுத்த அனுமதித்திருந்தால் பெருமளவு பிரச்சினைகள், நெருக்கடிகளை தவிர்த்திருக்கலாம் என்று சில மாதங்களுக்கு முன்னரும் அவர் கூறியிருந்தார்.

இப்போது அவர் கிழக்கு முனையத்தை ஜப்பானுக்கு வழங்க முன்வந்திருக்கின்ற போதும், அதனை ஏற்றுக் கொள்வதற்கு ஜப்பான் தயாராக இருக்கிறதா என்ற கேள்வி இருக்கிறது.

இலங்கையின் மீதான நம்பிக்கையை ஜப்பான் பெருமளவில் இழந்து விட்டது. சீனாவை நம்பி, ஜப்பானின் நம்பகத் தன்மையையும், ஆதரவையும் இலங்கை இழந்து போனது பெரியதொரு இழப்பாகும். அதனை ஜனாதிபதி பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறார். அந்த இடைவெளியை நிரப்புவதற்கு அவர் முயற்சிகளை முன்னெடுத்த போதும், இன்று வரை அது சரிப்படவில்லை.

அதனால் தான், ஜனாபதிபதி ஜப்பானுக்கு வழங்குவோம் அவர்கள் அதனை ஏற்காது போனால் வேறு நாடுகளுக்கு வழங்குவது பற்றி ஆலோசிப்போம் என்று கூறியிருக்கிறார்.

ஜப்பானைப் பொறுத்த வரையில் இப்போதைக்கு இலங்கையில் பாரிய திட்டங்களில் முதலீடு செய்வதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறது. ஜப்பான் கிழக்கு கொள்கலன் முனையத் திட்டத்தை நிராகரித்தால், அடுத்து என்ன நடக்கப் போகிறது?

இங்கு அடுத்த பிரச்சினைக்கு ரணில் விக்கிரமசிங்க பிள்ளையார் சுழி போடுவதாகத் தெரிகிறது. தற்போது கொழும்பு துறைமுகத்தில் சீனாவுக்கும், இந்தியாவுக்கும் இடமளிக்கப்பட்டிருக்கிறது. கட்டி முடித்து, முகாமைத்துவம் செய்து, 35 வருடங்களில் மீள ஒப்படைக்கும் வகையில், கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத் திட்டம் சீனாவுக்கு வழங்கப்பட்டது.

அதனை இன்னும் 25 ஆண்டுகளில் இலங்கையிடம் சீனா ஒப்படைக்க வேண்டும். மேற்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவின் அதானி குழுமம் கட்டத் தொடங்கியுள்ளது. இவ்வாறான நிலையில் கிழக்கு முனையத்தை விட்டு ஜப்பான் விலகிக் கொண்டால், சீனாவும், இந்தியாவும் கிழக்கு கொள்கலன் முனையத்துக்காக கடுமையாக போட்டி போடும். சீனாவிடம் உள்ள தெற்கு முனையத்துடன் போட்டி போடுவதற்காகவே முன்னர் ஜப்பானுடன் இணைந்து இந்தியா கிழக்கு முனையத்தை கைப்பற்ற போட்டியிட்டது.

அதனைத் தடுப்பதற்காக சீன தனது புலனாய்வுப் பலத்தையும் நிதி வளத்தையும் பயன்படுத்தியது.. கிழக்கு முனையத்தை இந்தியாவிடம் வழங்கினாலோ சீனாவிடம் வழங்கினாலோ கொழும்பு துறைமுகத்தில் தற்போது காணப்படும் சமநிலையை குழப்பிவிடும். இதனால் கிழக்கு முனைய விவகாரம் மீண்டும் பிராந்திய, சக்திகளுக்கிடையிலான மோதலை உருவாக்கி விடலாம்.

ஏற்கனவே பல விடயங்களில் இலங்கையின் ஆட்சியாளர்கள், இவ்வாறான ஆதிக்கப் போட்டிக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அதற்கான சூழலைத் தான் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.

## 35 வருடங்களாகியும் 13வது திருத்தச்சட்டம் பற்றியே....


(3ம் பக்கத் தொடர்ச்சி) கொன்றவர்கள் தற்போது மாகாண சபைகளுக்குள் வந்துள்ளனர். மாகாண சபைகளின் இயக்கி தங்களின் கைகளில் இருப்பதாக அவர்களின் தலைவர்கள் கூறினர். ஆனால், மாகாண சபைகள் காரணமாக நாடு பிரியும் விசாவை பெற்றே மாகாணங்களுக்கு செல்ல நேரிடும் என்று கூறியே அன்று அவர்கள் விஜய குமாரதுங்கவை கொன்றனர்.

தற்போது 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சிக்கும் அவர்கள் என்ன கூறுவார்கள் என்று பார்ப்போம். இம்முறை தேசிய பிரச்சினையை தீர்ப்பதாக கூறி ஏமாற்றினால், கடந்த காலத்தில் நடந்தது போல் போராட்டங்களில் வடக்கை சேர்ந்த இளைஞர்கள் ஈடுபடுவார்கள்.அது ஆயுதம் தாங்கிய போராட்டமாக இருக்காது அமைதியான போராட்டமாக இருக்கும். அதன் மூலம் வடக்கின் அரசியல் முற்றாக தலைகீழாக மாறும். அப்படி நடந்தால், புதியவர்களுடனேயே எதிர்காலத்தில் பிரச்சினையை பற்றி பேச்சுவார்த்தை நடத்த நேரிடும். அதற்கு முன்னர் சம்பந்தன் போன்றவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்க்க முடியுமான நேரத்தில், கட்டாயம் அதனை செய்ய வேண்டும் எனவும் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.


உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
“சங்கீத சங்கமம் 2023”

EELANADU 16 Dec 2022 ஈழநாடு


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். புதிய விஷயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் உண்டாகும். உத்தியோகத்தில் செயல்திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கப் பெறுவீர்கள். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். பெண்கள் எந்த விஷயத்திலும் தெளிவான முடிவை எடுப்பீர்கள்.




ரிஷபராசி அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலை பளுவையும் சந்திக்க நேரிடும். குடும்பத்தினருடன் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். வீண் வாக்குவாதங்கள் அகலும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள். சகோதரர்களுடன் கருத்து வேற்றுமை நீங்கும்.




மிதுனராசி அன்பர்களே! எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். அடுத்தவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும். சொத்துக்களை வாங்கும் போதும், விற்கும் போதும் கவனமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடந்தாலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும்.




கடகராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். தொழில், வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். எழுத்து தொழிலில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். தொழில், வியாபாரம் தொடர்பாக துணிச்சலாக எடுக்கும் முடிவுகள் வெற்றியை தரும்.




சிம்மராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். எனவே யாருக்கும் எந்த வாக்குறுதியையும் அளிக்காமல் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாவது ஆறுதலை தரும். உத்தியோகஸ்தர்கள் மிகவும் கவனமாக தங்களது பணிகளை கவனிப்பது நல்லது.



கன்னிராசி அன்பர்களே! லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். எதை விரும்பினாலும் அது கிடைக்க வழி தெரியும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். பணியாளர்கள் மூலம் லாபம் கிடைக்க பெறுவீர்கள். தொழில் விரிவாக்கம் செய்யும் எண்ணம் மேலோங்கும். உத்யோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்க பெறுவர்.




துலாம்ராசி அன்பர்களே! முயற்சிகள் வெற்றி பெறும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசுவது போன்றவற்றை செய்யும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் வழக்கம் போல் இருக்கும். வேலை தொடர்பான வீண் அலைச்சல் உண்டாகலாம். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் நண்பர்களிடம் இருந்து வந்த பூசல்கள் அகலும். பெண்கள் எதை பற்றியும் அதிகம் யோசித்து மனதை குழப்பி கொள்ளாமல் இருப்பது நன்மை.




விருச்சிகராசி அன்பர்களே! காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். முயற்சிகளில் உடனடியாக பலன் காண்பது அரிது. எந்த ஒரு வேலைக்கும் கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. சகோதரர்கள் வழியில் ஏதேனும் பிரச்னை வரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். ஆனாலும் அதன் மூலம் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள்.






தனுசுராசி அன்பர்களே! பொருளாதாரம் ஏற்றம் அடையும். அதே வேளையில் சுபச்செலவுகள் அதிகமாகும். எந்த விஷயத்திலும் மிகவும் நிதானமாக இருப்பது நல்லது. அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களை மற்றவர்களிடம் கூறி ஆலோசனை கேட்பதோ அல்லது அதைப் பற்றி விவாதிப்பதையோ தவிர்ப்பது நல்லது. பங்குதாரர்களிடம் பேசும் போது கவனம் தேவை.



மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம் கவனம் தேவை. வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் வேகம் பிடிக்கும்.



கும்பராசி அன்பர்களே! காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். முயற்சிகளில் உடனடியாக பலன் காண்பது அரிது. எந்த ஒரு வேலைக்கும் கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. சகோதரர்கள் வழியில் ஏதேனும் பிரச்சனை வரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும்.



மீனராசி அன்பர்களே! செய்யும் காரியங்கள் வெற்றியை தரும். சாதுர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செயல்திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் மனம் மகிழும்படியான நிகழ்ச்சி நடக்கும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். பெண்கள் சாதூர்யமாக பேசி எல்லா காரியத்தையும் வெற்றிகரமாக செய்து முடிப்பர். இவ்வாரம் சிறப்பானதாகும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## இந்திய இராஜதந்திரிகளது இரகசிய

(20ம் பக்கத் தொடர்ச்சி) உரையாடப்பட்டுள்ளது. தமிழக மீனவர்களை கைது செய்வது மற்றும் அவர்களது படகுகளை நாசம் செய்வது தொடர்பில் அதிக கண்டிப்பு வெளிப்படுத்தப்பட்டதாகவும் சீனாவுடன் இலங்கை நெருக்கமாக செயல்படுவது தவறானது என்றும் எடுத்துரைக்கப்பட்டதாக தெரிய வருகிறது. ஆனால் சிங்கள ஊடகமொன்று இலங்கையிலிருந்து சீனாவை முழுமையாக வெளியேற்றினால் உங்களோடு முழுமையாக இந்தியா இருக்கும் என கொழும்பு வருகை தந்த அஜித் டோவால் தெரிவித்ததாக செய்தி வெளியிட்டுள்ளது.

அவ்வாறே றோவின் தலைமைச் செயலாளரின் கொழும்பு வருகை இந்திய ஊடகங்களால் மறைக்கப்பட தென்னிலங்கை சிங்கள ஊடகங்கள் அதிகம் முதன்மைப்படுத்துகின்றன. அதற்கான அடிப்படை இந்தியா சார்ந்து சிங்கள மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் நகர்வாகவே தெரிகிறது. அத்தகைய அச்சத்தை பெரும்பான்மை தேசியவாதமாக மாற்றி அரசியல் நலன்களை எட்டுவதுடன், இலங்கைத்தீவின் பல்லினப் பண்பாட்டின் அடையாளங்களை முடிவுக்குக் கொண்டுவர முடியுமென கருதுகின்றனர். அதில் சிங்கள ஊடகங்களும் தீவிரவாத உணர்வு கொண்ட அரசியல்வாதிகளும் இயங்குகின்றனர். மீளவும் அத்தகைய சூழலை நோக்கி நகர்வதற்கான திட்டமிடல் ஒன்றினை தென்னிலங்கையில் அவதானிக்க முடிகிறது.

எனவே இலங்கைத்தீவின் அரசியலில் பாரிய பூபறிநிலை ஒன்று இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படுகிறது. இந்திய தேசிய பாதுகாப்புச் செயலாளரது வருகையை விட இந்திய புவனாய்வுத் துறையின் தலைமை கொழும்புக்கு வருகை தந்திருப்பது அதிக கவனம் கொள்ள வேண்டியதும் முக்கியமானதென்பதும் உணரப்பட வேண்டும். அவ்வாறே சீனாவும் இந்தியாவும் இலங்கைத் தீவில் முரண்படுவது போல் இந்து சமுத்திர விடயத்திலும் முரண்பாடுகளை அதிகம் கொண்டுள்ளன என்பது இரு நாட்டினது நகர்விலிருந்தும் தெளிவாகிறது.

பொருளாதார வர்த்தக விடயத்தில் இரு தரப்பும் இணைங்கிச் செயல்பட்டாலும் அரசியலிலும் இராணுவ விடயங்களிலும் அதிக முறுகல் நிலையை கொண்டுள்ளன. ஆனால் இந்தியாவின் இராணுவ வலிமையை விட சீனா பல மடங்கு முன்னேறிய நாடாகவே உள்ளது. பொருளாதாரத்திலும் அத்தகைய நிலையே காணப்படுகிறது.

மறு பக்கத்தில் தென்னிலங்கையில் மீளவும் இந்திய எதிர்ப்பு வாதம் தூண்டப்படுகிறது. அதன் விளைவுகள் அபாயமானதாகவே உணரப்பட வாய்ப்புள்ளது.

## மீண்டும் சென்னை - பலாலி விமான

(9ம் பக்கத் தொடர்ச்சி) இதேவேளையில் யாழ். நகரப் பகுதியிலிருந்து பலாலிக்கு தனியார் வான்களும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. வான் ஒன்றை வாடகைக்கு அமர்த்துவதாயின் பத்தாயிரம் ரூபா அதற்காக அறவிடப்படும் என வாகன உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார். இருந்த போதிலும் இந்தத் தொகை டீசல் விலையைப் பொறுத்து குறைவடையலாம்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்து இறங்குபவர்கள் அங்கிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு வான் ஒன்றிற்கு சுமார் அறுபதாயிரம் ரூபாவரையில் கட்டணமாகச் செலுத்த வேண்டியிருப்பதுடன், சுமார் ஏழு மணி நேரத்தையும் செலவிட வேண்டும். அதனுடன் ஒப்பிடும் போது யாழ்ப்பாணத்தில் வந்திறங்குவது நேரத்தையும், பணத்தையும் மிச்சம் பிடிப்பதாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்கும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் கூட சென்னை வந்து யாழ். வருவதை விரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் எந்தளவுக்கு வளர்ச்சியடையும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். மற்றொரு வாரத்தில் அது தொடர்பாக நாமும் விரிவாக ஆராய்வதற்கு முற்படுவோம்.

## தமிழ்த் தரப்புடன் முதற் கட்டப் பேச்சுவார்த்தை

(7ம் பக்கத் தொடர்ச்சி) ஒரு தீர்வை அரசியல் யாப்பு மூலம் கொண்டு வரலாம் என்பது சம்பந்தமாகவும் நாங்கள் பேசி ஒரு முடிவுக்கு வரலாமா என்பது தொடர்பாகவும் ஒரு ஒரு தீர்வுக்கு வந்திருக்கின்றோம்.

அந்த அடிப்படையிலே நாங்கள் இந்த மூன்று விடயங்களையும் சம நேரத்தில் பரிசீலிக்க இருக்கின்றோம். அதற்கு அரசாங்கம் சரி என்று கூறி இருக்கிறது'' என்றார். இன்றைய கலந்துரையாடலில் சிங்கள முஸ்லிம் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் கலந்துக் கொண்ட போதிலும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி நிராகரித்திருந்தது.

## மகிந்தாவின் மனைவி செய்த மாபெரும் மோசடி!

(8ம் பக்கத் தொடர்ச்சி) ராஜபக்ஷவின் மனைவி செய்த மிகப்பெரிய மோசடி யாகும். இவ்வாறான திருட்டுக்கள் காரண மாக இன்று எந்த நாடும் வங்குரோத்து அடையாத அளவிற்கு இலங்கை வங்குரோத்து அடைந்துள்ளது.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இல்லாதொழித்து பெயரை மாத்திரம் வைத்துக் கொண்டு தேவைக்கு ஏற்ப அதனை மீண்டும் உருவாக்குவது ராஜபக்ஷக்களின் கனவுகளில் ஒன்றாக காணப்பட்டது. அவர்கள் ஆட்சிக்கு வரும் வரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எவரும் திருடவில்லை. நாட்டில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் காணப்படுகின்றன. அதில் பெரும் பான்மை பலத்துடன் காணப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பாராளு மன்றத்தில் 6 கட்சிகளாக பிரிந்து செயற்படுகிறது. அதில் பெரும்பாலனவர்களை ராஜபக்ஷ அழைத்துச் சென்று விட்டார்.

எதிர் காலத்தில் நாட்டை மீட்டெடுக்க இளைஞர்களுடைய பங்களிப்பு அவசியம். கடந்த காலங்களில் அரசாங்கத்திற்கு எதிராக மேற் கொள்ளப்பட்டமக்கள் எழுச்சிப் போராட்டங்கள் இதனை நன்கு உணர்த்தின. கடந்த 74 வருடங்களாக நாட்டு மக்கள் ஆட்சியாளர்களை பதவியில் அமர்த்தினாலும் அவர்கள் மக்களை ஏமாற்றி ஊழல் மற்றும் மோசடி, கொலை, கொள்ளையில் ஈடுபட்டு நாட்டையே முற்றாக இல்லாது செய்துள்ளனர். இந்த நிலையில் நாட்டைகட்டியெழுப்ப கூடிய பொருத்தமான தலைவர் ஒருவர் இல்லாத நிலையே இன்று காணப்படுகிறது. நாட்டை கட்டியெழுப்ப புதியதொரு அரசியல் கலாசாரம் மற்றும் மாற்றமொன்று தேவைப்படுகிறது. புதியதொரு தலைமைத்துவம் தேவைப்படுகிறது. புதிய திட்டங்கள், கொள்ளைகளை கொண்ட தலைவர் ஒருவர் தேவைப்படுகிறார். அரசியலமைப்பில் புதிய மாற்றம் ஒன்று தேவைப்படுகிறது என்றார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க_
விற்க_
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• RESP
• Disability
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.